கொலோசெயர்

எபேசியர் நிருபம் எழுதப்பட்ட அதே சமயத்தில்தான் கொலோசெயர் நிருபம் எழுதப்பட்டது. கொலோசெ சபையில் காணப்பட்ட குறிப்பிட்ட உபதேசத் தவறுகளுக்கு இந்த நிருபத்தில் பவுல் பதிலளித்திருக்கிறார். பவுல் எழுதிய பிலேமோன், எபேசியர் நிருபங்களை தீகிக்கு மூலம் கொடுத்தனுப்பியபொழுது இந்த நிருபத்தையும் கொடுத்தனுப்பினார்.

வரலாற்றுப் பின்னணி

எபேசுவுக்குக் கிழக்குப் பகுதியில் கொலோசெ பட்டணம் அமைந்துள்ளது. கொலோசெயிலும், லவோதிக்கேயா, எராப்போலி பகுதிகளிலும் ஊழியஞ்செய்து வந்த எப்பாப்பிராவின் மூலம் கொலொசெ சபையின் செய்திகளைப் பவுல் பெற்றுக்கொண்டார். (கொலோசெயர் 1:7,8; 4:12,13). கொலோசெ சபையை ஒருபோதும் பவுல் சந்தியாமலிருந்த போதிலும், இச்சபையின் ஆவிக்குரிய நலனுக்கு அவரே உத்தரவாதி எனக் கருதியிருந்தார். அவர் எபேசுவில் ஊழியஞ் செய்தபொழுது சுவிசேஷப் பணி புரிந்த பகுதியில்தான் கொலேசெ அமைந்திருந்தது.

கொலோசெ விசுவாசிகளிடையே நிலவிய, குறிப்பிட்ட சில தவறான உபதேசங்கள் பற்றி எப்பாப்பிரா பவுலிடம் கூறியிருப்பதாகத் தெரிகிறது. கிறிஸ்துவின் மூலமாயும், சுவிசேஷத்தின் மூலமாயும் வெளிப்படுத்தப் பட்டதைக் காட்டிலும் விசேஷித்த தேவ அறிவை நாம் அடையக் கூடும் என வாக்குப் பண்ணப்பட்ட ஓர் போதனையை அவர்கள் பின்பற்ற ஆரம்பித்தனர். பாரம்பரிய பழக்க வழக்கங்களாகிய (கொலோசெயர் 2:11-16). மாயமான தாழ்மை, தேவதூதர்களுக்கு ஆராதனை செய்தல் (2:8,18,19), சரீரத்தை ஒடுக்குதல் (2:20-23), போன்றவற்றைக் கைக்கொள்வதின் மூலம் தேவ அறிவை அடையக் கூடும் என விசுவாசித்தார்கள். இந்தத் தவறான உபதேசத்தைப் புகுத்தியவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்களிடம் இதை தொனிக்கச் செய்தார்கள் என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் பவுல் எதிர்த்ததைப் போன்ற பாரம்பரிய பழக்க வழக்கங்கள் பற்றிய இப்போதனை யூதரிடமிருந்து தோன்றினதே (2:15-4:7). கொலோசெயா விசுவாசிகளிடையே நிலவிய இதர தவறான உபதேசங்கள் யாதெனில், அவர்கள் தங்களுடைய முந்தைய அஞ்ஞான மார்க்கத்திலிருந்து சபைக்குள் கொண்டு வந்த மூடநம்பிக்கையாகும். இந்தப் போதனைகள் கிறிஸ்து உலகத்தில் மேலானவர், சபையின் தலையானவர் என்ற சரியான இடத்தைக் கிறிஸ்துவுக்கு அளிக்க மறுத்தன. மனுஷனால் வகுக்கப்பட்ட மனுஷீக விதிமுறைகளின் மூலம் ஒரு நபர் பாவ சுபாவத்தைக் களைந்து போடக் கூடுமென அவர்கள் உரிமை பாராட்டினார்கள்.

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

கொலோசெயர்கள் உண்மையான சுவிசேஷத்தை எபேசியாிடமிருந்து கேட்டறிந்ததைப் பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டினார் (1:7). கிறிஸ்துவானவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம், பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ளவைகளுமாகிய சகலவற்றுக்கும் சிருஷ்டிகர், சபையின் தலைவர், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர், யாவரையும், தேவன் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ள ஏதுவாயிருந்தவர் எனக் கிறிஸ்துவைப் பற்றி பவுல் கூறுகிறார்.

கொலோசெயர்

(1:15-20). கிறிஸ்துவுக்குள் மாத்திரமே ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. அவர் மூலமாகவே தன்னை அடிமைப் படுத்தியிருக்கும் பாவசுபாவத்தை ஒருவன் களைந்து போட முடியும். (2:3,10,11,15). தேவபக்தியுள்ள ஜீவியத்தைச் செய்தவற்கான ஆதாரம் கிறிஸ்துவோடு கூட தொடர்ந்து அந்நியோந்நியமாயிருப்பதேயாகும் (2:20-4:6).

லவோதிக்கேயாவின் சமீபத்திலுள்ள சபையிலும் தனது நிருபம் வாசிக்கப்பட வேண்டுமென பவுல் எதிர்பார்த்தார் (4:16). இதனால் அங்குள்ள விசுவாசிகள் தவறான உபதேசத்தைப் பின்பற்றுவதிலிருந்து அவர்களைத் தடுத்து நிறுத்த உதவும்.

கொலோசெயர்: கிறிஸ்துவின் முதன்மை

1. வாழ்த்துக்கள் (1:1,2).
2. கிறிஸ்து அகில உலகிலும் முதன்மையானவர் (1:3-2:3).
3. கிறிஸ்து மனுஷீக விதிகளுக்குமேல் முதன்மையானவர் (2:4-23).
4. கிறிஸ்து கிறிஸ்தவ வாழ்வில் முதன்மையானவர் (3:1-4:6).
5. முடிவானக் குறிப்புகள் (4:7-18).

கொலோசெயர் தங்களுடைய தவற்றைக் காணும்படி பவுல் உதவுவதின் திட்டம் யாதெனில் கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்துவதும், அவருடைய தெய்வீகத்தையும் முதன்மையையும் விளங்கப்பண்ணுவதேயாகும்.

இதுவரை அவர்கள் பின்பற்றி வந்த தவறான உபதேசத்தின் ஏழ்மை நிலையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஏற்கெனவே அவர்கள் "கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறார்கள்" என்பதை அவர்களுக்கு அவர் நினைப்பூட்டினார். (2:10). பவுலின் நிருபத்தை வாசித்து, அவர் கூறும் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் அவர்களுடைய தவறான விசுவாசத்தில் தொடர்ந்திருப்பது கூடாத காரியமே. இந்த நிருபத்தை ஆதியில் வாசித்தவர்களுக்கு எவ்வளவு முக்கியமாக இருந்ததோ, அதைப் போன்று இந்நாட்களில் நமக்கும் இச் சத்தியம் முக்கியமானதாகும். அவர்களைப் போன்று நாமும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கிறிஸ்துவின் மீது மையங்கொண்டிருக்கிறதா என்பதில் கவனமாயிருக்க வேண்டும். அகில உலகத்தின் அதிகாரமுடையவரை, சபையின் முதன்மையான தலையானவரை நாமும் ஆராதிக்கவேண்டும்.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. கிறிஸ்து எல்லாவற்றிலும் முதல்வராக, சபையின் தலைவராக கொலோசெயரில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். இவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

2. கிறிஸ்து மனுஷீக விதிகளுக்கு மேல் முதன்மையானவர்.

கொலோசெயர்

கிறிஸ்து, முதல்வராயிருப்பவர்

கொலோசெயர் குறிப்பு	பொருள்	கிறிஸ்துவின் நிலை
1:15	அதரிசனமான தேவனுடைய	தற்சுரூபம்.
1:15	சர்வ சிருஷ்டிக்கும்	முந்தினவர்
1:16	சகலமும்	சிருஷ்டித்தவர்
1:17	எல்லாவற்றிற்கும்	முந்தினவர்
1:17	எல்லாவற்றையும்	நிலைப்படுத்துகிறவர்
1:18	சபையின்	தலையானவர்
1:18	மரித்தோரிலிருந்து எழுந்த	முதற்பேறு
1:20	யாவையும்	ஒப்புரவாக்குகிறவர்
2:15	துரைத்தனங்களையும்,	வெற்றிசிறந்தவர்.

அப்போஸ்தலருடைய ஜெபம் கொலோசெயர் 1:9-12

முன்னுரை

அ. பரிசுத்த ஆவியானவரின் பலத்தின் உதவியால் விசுவாசிகளான ஒவ்வொருவருக்காகவும், நிலைநாட்டப்பட்ட ஒவ்வொரு சபைக்காகவும், அப்போஸ்தலர்கள் பிதாவாகிய தேவனுக்கு தோத்திரம் செலுத்தினது மட்டுமல்லாமல், புதிய விசுவாசிகளும் கீழ்க்கண்டவற்றைப் பெற்றுக்கொள்ளும்படியாக வேண்டுதல் செய்தார்கள்.

1. தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட,

2. கர்த்தருக்குப் பாத்திரராக வாழும் வாழ்க்கைக்காக,

3. எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்பட

ஆ. மற்ற அப்போஸ்தல ஜெபங்கள், எபேசியர் 1:16-19 3:14-19; பிலிப்பியர் 1:9-11, ஆகிய வசனங்களில் காணப்படுகிறது.

1. தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் விசுவாசிகள் நிரப்பப்பட அப்போஸ்தலர்கள் ஜெபித்தனர் (1:9).

அ. "இதினிமித்தம், நாங்கள் அதை கேட்ட நாள் முதல்..." கொலோசெய சபை, அந்தப்பட்டணத்தைச் சேர்ந்த எப்பாபிரா எனப்பட்ட ஒருவனால், ஒருசமயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் (1:7, 4:12) ஆகவே, அந்த சபையைக் குறித்தும், அதன் பிரச்சனைகளைப் பற்றியும் அவன், பவுலுக்குக் கூறினான். (1:4,8; 2:6-23). இக்காரியமும், மற்ற காரியங்களுடன் சேர்ந்து, பவுல் இந்த நிருபத்தை எழுதத் தூண்டக் காரணமாயிருந்தது.

ஆ. "உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்...." ஒருசமயம் அவர்கள் நிலைநாட்டின சபைகளில் ஒன்றில், பவுலும் அவனுடைய உடன் ஊழியர்களும் ஒரு பிரச்சனையைக் கண்டுபிடித்தபோது, அந்தப் பிரச்சனை தீர்க்கப்படும்வரை, அவர்கள் ஜெபிப்பதை நிறுத்தவில்லை!

(பிதாவாகிய தேவனிடம் விடாப்பிடியாக வேண்டுதல் செய்தார்கள்). சபைகளிலுள்ள விசுவாசிகள், அவருடைய சித்தத்தைக் தெளிவாகவும் பூரணமாகவும், அறிகிற அறிவினால், பிதாவாகிய தேவன் நிரப்பும்படியாகவும், அவர்கள் ஜெபித்தார்கள்.

இ. "அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட.... தேவனிடம் வேண்டுதல் செய்கிறோம்". "அவருடைய சித்தத்தை அறிகிற அறிவு" என்றால், தேவனுடைய சித்தத்தை நன்றாகப்பகுத்தறிய; முற்றிலும் தெளிவாக கிரகித்துக்கொள்வது அல்லது, சன்மார்க்க நல் ஒழுக்கம் மற்றும் கிறிஸ்தவ நடத்தை (ஒழுக்கம்) தொடர்பாக, தேவனுக்குப் பிரியமுண்டாக்குவது எது என்று விளங்கிக்கொள்வது. என்று பொருள்படும். தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் "நிரப்பப்படுவது", என்றால் ஒரு மனிதனுடைய முழு வாழ்க்கையிலும், அவனுடைய சிந்தனைகள், விருப்பங்கள், நடத்தை, நோக்கங்கள், திட்டங்கள், மற்றும் பேராவல்கள், ஆகிய இவை யாவற்றையும் தேவனுடைய சித்தம் மேற்கொள்ள வேண்டும். இதைக் கீழ்க்கண்ட பண்புகளையுடையவர்கள் மட்டுமே தெளிவாக அறிந்து நிறைவேற்ற முடியுமென்று, ரோமருக்கு எழுதின நிருபத்தில் பவுல் கூறுகிறார்.

1. இந்த உலகத்தின் நடைமுறைகளை இனி ஒருபோதும் அநுசரிக்காதவர்கள்.

அப்போஸ்தலருடைய ஜெபம் கொலோசெயர் 1:9-12

2. பரிசுத்த ஆவியானவரால் அவர்களுடைய மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக்கப்பட்டவர்கள்.

3. தங்களைக் குறித்து மிக மேன்மையாக எண்ணாதிருப்பவர்கள்.

4. தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும் (ரோமர்12:2; அப்போஸ்தலர் 22:14).

ஈ. "நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும்" ஆவிக்குரிய ஞானமும், விவேகமும் பரிசுத்த ஆவியானவரால் ஒரு விசுவாசிக்குக் கொடுக்கப்படுகிறது. (1கொரிந்தியர்2:12-16). அவ்வாறே சன்மார்க்க வளர்ச்சியும் உள்ளது. (2கொரிந்தியர் 3:18) "ஆவிக்குரிய ஞானமும் விவேகமும்" என்பது, "தேவனுடைய சித்தத்தைப்பற்றி அறிகிற அறிவு" என்பதை வேறு முறையில் கூறுவதாகும்.

2. கர்த்தருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், விசுவாசிகளுக்காக அப்போஸ்தலர்கள் வேண்டுதல் செய்தனர். (1:10-12).

அ. வசனம்10. "கர்த்தருக்குப் பிரியமுண்டாக, அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்... உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்". "அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும்." என்றால் சுற்றிலும் எல்லா இடங்களிலும் நடந்து செல்லும்போது, வெகு தொலைவு இடங்களுக்குச் செல்லும்போது, உன்னுடைய வாழ்நாள் முழுவதும் பயபக்தியாக, அல்லது தெய்வ பயமுள்ள ஒரு மனிதனாக வாழ்க்கை நடத்த வேண்டும், என்று பொருள்படும்.

ஆ. 10-12 "சகல வித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக..." "கர்த்தருக்குப் பிரியமுண்டாக" என்றால், நீ செய்கிற எல்லாக் காரியங்களும் தேவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்கதாக இருக்கவேண்டும். (1தெசலோனிக்கேயர்4:1; 2கொரிந்தியர் 5:9) இது, கீழ்க்கண்ட வசனங்களில் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

1. சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத்தந்து-ஒரு விசுவாசி, தேவன் மற்றும் கிறிஸ்துவின்மேல்வைக்கும் விசுவாசத்தின் விளைவுகளே நல்லசெய்கைகள் (கிரியைகள், காரியங்கள்) (யாக்கோபு 2:18).

2. "தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து"- "விருத்தியடைந்து" என்றால், பெருகும்படியாக வளர்ச்சியடைவது, அதிகரிப்பது, என்று இங்கு பொருள்படும். "தேவனை அறிகிற அறிவில்" என்றால், தேவனைப்பற்றிய அறிவை, மிகத் தெளிவாக முழுமையாகப் பெற்றிருப்பது. தேவனைப் பூரணமாகவும் திட்டவட்டமாகவும் பகுத்தறிந்துகொள்வது, என்று பொருள்படும். (எபேசியர்4:12-13).

3. எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் - "பலப்படுத்தப்படவும்" என்றால் யாவற்றையும் செய்ய சக்திகொடுக்கப்படுவது, என்று பொருள்படும். "வல்லமையாலும்" என்பது, தேவனுடைய பலத்தையும் அதிகாரத்தையும் குறிக்கிறது. நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்திற்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நமக்கு மிகுந்த சகிப்புத் தன்மையையும், பொறுமையையும் கொடுக்க தேவன், அவருடைய உன்னத வல்லமையால், இடைவிடாமல் நம்மை பலப்படுத்துகிறார்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

அப்போஸ்தலருடைய ஜெபம் கொலோசெயர் 1:9-12

(பலவிதமான சோதனைகளின் மத்தியில் கடைசிவரை நிலைத்திருக்க) (பிலிப்பியர் 4:13; தீத்து 2:13).

4. சந்தோஷத்தோடே பிதாவை தோத்தரிக்கிறோம் - பிதாவுக்கு "சந்தோஷத்தோடே" தோத்திரம் செலுத்துகிறோம். என்றால், மகிழ்ச்சியுடன், அமைதலாகக் களிகூர்ந்து, ஒளியின் இராஜ்ஜியத்தில் நமக்குள்ள சுதந்திரத்திற்காக நம்முடைய பரலோக பிதாவிற்கு நன்றி செலுத்தும்போது, மிகவும் ஆனந்தமாகக் களிகூரவேண்டும். (எபிரெயர் 9:15; 1பேதுரு1:4-5; ரோமர்8:17; கலாத்தியர்3:29; 4:7, 1பேதுரு3:7).

முடிவுரை

அ. பவுலும் அவன் உடன் ஊழியர்களும், புறஜாதிகள் மத்தியில் அவர்கள் ஸ்தாபித்த புதிய சபைகள் மற்றும் புதிய விசுவாசிகளைக் குறித்து எப்போதும் கருத்துள்ளவர்களாக இருந்தார்கள். ஏனெனில் பொய்போதகர்களும் கிறிஸ்துவின் சத்தியத்திற்கும் விரோதமாக உபதேசிப்பவர்களும் ஏராளமாக பெருகியிருந்தனர். ஆகவே அப்போஸ்தலர்கள், அவர்களை பிரகாசிக்கப்பண்ணவும், அவர்களுக்கு உதவிசெய்து காப்பாற்றும்படியாகவும் தேவனை நோக்கி இடைவிடாமல் வேண்டுதல் செய்தனர்.

ஆ. பிதாவாகிய தேவனைப் பிரியப்படுத்தும் காரியங்களைமட்டும் செய்யவும், அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டு கிரியை செய்ய வேண்டுமென்பதும் அவர்களுடைய ஜெபங்களில் ஏறெடுக்கப் பட்ட குறிப்புக்கள். கீழ்க்கண்டவற்றை விசுவாசிகள் பெற்றுக் கொள்ளும்படியாக, அப்போஸ்தலர்கள் ஜெபித்தார்கள்.

1. தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்பட,

2. மற்றவர்களுக்காக நற்கிரியைகளாகிய கனிகளைக் கொடுக்கும்படியாக,

3. தேவனைப்பற்றிய அறிவில் வளர.

4. அவர்கள் கடைசிமட்டும் நிலைத்திருக்க, தேவனுடைய வல்லமையினால் பலப்படுத்தப்பட,

5. கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு இருக்கும் சுதந்திரத்திற்காக பிதாவிற்கு மகிழ்ச்சியோடு தோத்திரம் செலுத்தும்படியாக,

இ. அப்போஸ்தலர்களுடைய ஜெபங்களிலுள்ள மற்ற குறிப்புகளை, எபேசியர்1:16-19, 3:14-19; பிலிப்பியர்1:9-11; ஆகிய வசனங்களில் கண்டு வாசித்து, அறிந்துகொள்க.

கிறிஸ்துவின், எல்லாவற்றிற்கும் மேலான மிக உன்னத பதவி கொலோசெயர் 1:15-23

3. பிதாவினுடைய குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரையும், அவர் நிர்வகித்தார். எனவே கிறிஸ்துவே பிதாவினுடைய பிரதிநிதியாகவும் சுதந்தரவாளியாகவும் இருக்கிறார். அவருடைய சிருஷ்டிகள் எல்லாவற்றையும் நிர்வாகம் செய்யும் பொறுப்பும் அவருடையதாக இருக்கிறது.

இ. "முதற்பேறானவர்" என்ற சொல், கிறிஸ்துவினுடைய, கீழ்க்கண்ட இரண்டையும் குறித்துக் கூறுகிறது:

1. காலத்தில் முந்தினவர்-எல்லா சிருஷ்டிப்புகளின் காலத்திற்கு முன்னால் கிறிஸ்து இருக்கிறார்.

2. உயர்ந்த அந்தஸ்தில் உன்னதமானவர்-அந்தஸ்திலும், பதவியிலும் கிறிஸ்து எல்லா சிருஷ்டிகளுக்கும் மேலாக இருக்கிறார். இங்கு பவுல் கூறுவது என்னவென்றால், வேறு ஜீவராசிகள் தோன்றுவதற்கு முன்னதாகவே, கிறிஸ்து ஜீவித்து வருகிறார். அவர், "எல்லா சிருஷ்டிகளுக்கும் முன்னதாக" இருந்தார். (யோவான் 1:1,2 8:58, வெளிப்படுத்தின விசேஷம் 1:17, 2:8, 22:13) எல்லா சிருஷ்டிகளுக்கும் மேல், கிறிஸ்து மிகமேலான உன்னத அதிகாரத்தையுடையவர் என்பதைக் காட்ட அவர் சிறப்பாகக் கருத்துடையவராய் இருக்கிறார். (வானத்திலும் பூமியிலும்-மத்தேயு-28:18; 1கொரிந்தியர் 15:27; எபேசியர் 1:20-22)

ஈ. வச16 "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது", "சிருஷ்டிக்கப்பட்டது" என்றால் உற்பத்தி செய்யப்பட்டது, ஒன்றை உருவாக்கி, வடிவமைத்து அது வாழ்ந்திருக்கும்படி செய்வது, ஆதியில் முதன்முதலாக, உருவம் கொடுத்து, எல்லாவற்றையும் உண்டாக்கிய ஒருவர், என்று இங்கு பொருள்படும். (யோவான்1:3,10; எபிரெயர்1:2) இது கீழ்க்கண்ட யாவற்றையும் உள்ளடக்கும்:

1. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும்-இது, இயற்கைப் படைப்பிலுள்ள மூலப்பொருட்கள் மற்றும் ஜடப்பொருட்களுமாகிய, நாம் காணக்கூடியவைகளும் மற்றும் காணக்கூடாதவைகளுமான பொருட்களைக் குறிக்கலாம்.

2. சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும்.. இது இந்த உலகத்திலும், வானலோகத்திலுமுள்ள ஆவிக்குரிய இராஜ்ஜியத்தையும் அதில் அடங்கியுள்ள பிரதான தூதர்களையும், அதிபதிகளையும் குறிக்கும் (நல்லவைகளும், பொல்லாதவைகளுமாகிய இரண்டும் - தானியேல் 10:13; கொலோசெயர்2:15, எபேசியர்6:12)

உ. வச 16. "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது....அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது". "அவருக்கென்றும் (கிறிஸ்துவுக்கு) சிருஷ்டிக்கப்பட்டது" என்றால், சிருஷ்டிக்கப்பட்ட இந்த பிரபஞ்சத்தில் நடைபெறுபவைகளெல்லாம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது, என்று பொருள்படும். அது அவர் பக்கமாகவே குவிகிறது. படைக்கப்பட்ட இப்பூவுலகிலுள்ளவைகளெல்லாம் (இயற்கை ஜீவராசிகள் மற்றும் ஆவிக்குரியவைகள்) கிறிஸ்துவுடன் தொடர்புடைய, தேவனுடைய திட்டங்களை நிறைவேற்ற ஊழியம் செய்கின்றன. இது கீழ்க்கண்டவாறும் பொருள்படும்:

1. அவர் இப்பிரபஞ்சத்தின் கர்த்தராக இருக்கிறார்.

**கிறிஸ்துவின்,
எல்லாவற்றிற்கும்
மேலான
மிக உன்னத பதவி
கொலோசெயர் 1:15-23**

2. அவருக்குக் கீழாக எல்லாம் கொண்டுவரப்பட்டு ஆளுகை செய்யப்படுகின்றன.

3. இங்கு நடைபெறும் எல்லா காரியங்களிலும், ஏதாவது ஒரு வழியில் அவருக்கு மகிமையைக் கொடுக்கும் அம்சம் ஒன்று காணப்படும்.

ஊ. பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில், பவுல் பயன்படுத்திய ஒரு ஆரம்பகால கிறிஸ்தவ கீதத்தில், இந்த கருத்து இன்னும் அதிக தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது: "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்". (பிலிப்பியர் 2:10-11; கொலோசெயர்2:15; எபேசியர்1:10; 1கொரிந்தியர்15:24-28).

எ. வசனம் 17. "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது" "எல்லாவற்றிற்கும் முந்தினவர்" சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னதாகவே, கிறிஸ்து ஜீவித்து வருகிறார் என்பதற்கு இது மற்றொரு குறிப்பு (வசனம்15) அவர் நித்தியமானவர், "எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" என்று கூறுவது, அவர் படைத்த இந்த பிரபஞ்சத்தைக் கிறிஸ்து பராமரித்துத் தாங்கி, அங்கு குழப்பம் நேரிடாதவாறு காத்து வருகிறார், என்று பொருள்படும். (எபிரெயர்1:2-3). அவர் வானத்தையும் பூமியையும் அவருடைய வார்த்தையினாலே சிருஷ்டித்தது போலவே, அதைத் தமது வார்த்தையின் வல்லமையினாலேயே தாங்கி பாதுகாத்தும் வருகிறார்!

ஏ. கிறிஸ்து உண்மையிலேயே, சிருஷ்டிப்பில் மகா உன்னதமானவராயிருக்கிறார்.

1. இந்த பூவுலகத்திலும், ஆவிகளுக்குரிய உலகத்திலும் உள்ள சகலத்தையும் அவர் படைத்தார்.

2. அவருடைய வார்த்தையினாலே அதை அவர் காத்து வருகிறார்.

3. ஒரு நாள், இவைகள் யாவும் அவருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கும்.

4. அவர் கர்த்தர் என்று அறிவிக்கப்பட்டு, இவை யாவற்றின் மூலமாக மகிமையாகக் காணப்படுவார்.

2. கிறிஸ்து சபைக்கு மகா உன்னதமான தலைவராக இருக்கிறார் (1:18)

அ. "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்". "தலை" என்று சொல்லுவது, அதிகாரத்தையும் வல்லமையையும் குறிக்கிறது. சபைக்குக் கிறிஸ்து இராஜாவாக இருக்கிறார். அவரே பெரிய அதிகாரி, வழிகாட்டியானவர், தலைவர், பொருப்பான, முக்கிய மனிதர், அதை (சபையை) அவர் ஒருவரே வழிநடத்த, ஆட்சிசெய்ய, கட்ட, பராமரிக்க, பாதுகாக்க, மற்றும் நிலைநிறுத்த முடியும். (கொலோசெயர் 2:19; எபேசியர்1:22-23; 4:15; மத்தேயு16:18)

ஆ. பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டு,அழைக்கப்பட்டு, பயபக்தியோடு தேவனை ஆராதனை செய்யக்கூடும் நபர்களால் ஆனது "சபை", பழைய ஏற்பாட்டுக் காலம், புதிய ஏற்பாட்டு சகாப்தம் மற்றும் உபத்திரவகாலம் ஆகிய இந்நாட்களில் மீட்கப்பட்ட தேவனுடைய மக்கள் எல்லோரும் இதில் (சபை) அடங்குவார்கள். (யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருவரும் எபேசியர் 2:17-18,21)

கிறிஸ்துவின், எல்லாவற்றிற்கும் மேலான மிக உன்னத பதவி கொலோசெயர் 1:15-23

இ. இங்கு சபை, ஒரு "சரீரம்" என்று உருவகப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில், அது "அவருடைய சரீரம்", கிறிஸ்துவின் சரீரம். (ரோமர்12:5; எபேசியர்1:23, 4:15-16, 5:23). சபையின் அங்கத்தினர்கள் யாவரும், ஒரே சரீரமாக இருந்த போதிலும், பலவேறு விதமான ஆவிக்குரிய வரங்களை உடையவர்களாக பேசும்போது, பவுல் இந்த ஒப்புவமையைப் பயன்படுத்துகிறார். (1கொரிந்தியர் 12:12-26; ரோமர்12:4-5). நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" என்று கூறி, இந்த ஒப்புவமையை அவர் முடிக்கிறார். (1கொரிந்தியர்12:27, 1கொரிந்தியர்6:15-17). கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாய் நாம் இருப்பதினால், நாம்:

1. அவருடைய அதிகாரத்திற்குக் கீழ் இருக்கிறோம்.

2. அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

3. அவருடைய வேலையைச் செய்யவேண்டும்.

4. அவருடைய வல்லமை நமக்குக் கொடுக்கப்படுகிறது.

5. அவரோடு கூட பாடு அனுபவிக்கிறோம் (1:24)

ஆகவேதான்,நம்மோடு,ஒருவர் போராடும்போது,அல்லது, உபத்திரவப்படுத்தும்போது, உண்மையில் கிறிஸ்துவோடு போராடி, அவரையே உபத்திரவப்படுத்துகிறான், என்று வேதம் கூறுகிறது. (அப்போஸ்தலர்9:4, 26:14)

ஈ. "அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்". இரு ஒரு சமயம் இவ்வாறு வாசிக்கப்படலாம்: "அவர் ஆதியாகவும், மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதற்பேறுமானவராகவும் இருக்கிறபடியினால், சபையாகிய சரீரத்திற்கு, கிறிஸ்து தலையாக இருக்கிறார்", எனவே கிறிஸ்து சபைக்குத் தலையாக இருக்கிறார் ஏனெனில்,

1. அவரே ஆதியும்-இது சிருஷ்டிப்புக்குக் காரணமானவரைக் குறித்து பேசுகிறது. இதே அர்த்தத்துடன்: ஆதியாகமம் 1:1 இவ்வசனத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "ஆதியிலே தேவன்...சிருஷ்டித்தார்". சபைக்கு ஆரம்பம் அல்லது மூலகாரணம் கிறிஸ்துவாக இருக்கிறார். அவர் அதை சிருஷ்டித்தார்.

2. மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் அவர் முதற்பேறானவர்- "முதற்பேறானவராக" இருக்கிறார் என்றால், இனி ஒருபோதும், மறுபடியும் மரிக்காமல் இருக்க மரித்தோரிலிருந்து முதுன்முதலாக, கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டார். மகிமைப்பட்ட சரீரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. (ரோமர் 8:29-30; 1கொரிந்தியர் 15:20; வெளிப்படுத்தின விசேஷம் 1:5).

உ. "எல்லாவற்றிலும், முதல்வராயிருக்கும்படி", "முதல்வராயிருக்கும்படி" என்றால், அந்தஸ்தில் முதலாவது அல்லது செல்வாக்கு செலுத்துவதில் முதலாவது இருத்தல் என்று பொருள்படும். கிறிஸ்து இராஜாவாகவும், எல்லா காரியங்களிலும் முதல் இடத்தைப் பெறவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. சிருஷ்டிப்பு மற்றும் உயிர்த்தெழுதல் இதில் உள்ளடங்கும்' மானிடர் அல்லது அந்தகாரலோகாதிபதிகளும் பொல்லாத சக்திகளும் இதைக்குறித்து தர்க்கித்துத் தள்ளிவிட, அல்லது அவருடைய இடத்தில் மற்றொருவரை நிலைநிறுத்த முயற்சி செய்வார்களானால் அவர்களுக்கு பெரிய அதிர்ச்சி ஏற்படும்.

கிறிஸ்துவின், எல்லாவற்றிற்கும் மேலான மிக உன்னத பதவி கொலோசெயர் 1:15-23

3. ஒப்புரவாக்கிக்கொள்வதில், கிறிஸ்து முதன்மையான அதிகாரமுடையவராக இருக்கிறார் (1:19-23).

அ. வசனம் 19. "சகலமும் அவருடைய பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் அவருக்குப் பிரியமாயிற்று. "அவருடைய (தேவனுடைய) பரிபூரணமும்". தேவனுக்குரிய எந்தப்பண்பும், கிறிஸ்துவில் காணப்படாமல் இருக்கக்கூடாது என்று தேவன் தீர்மானித்தார். தெய்வீகத் தன்மைகள் பரிபூரணமாகவும், வல்லமை, அவருக்குச் சொந்தமானவைகள் யாவும் கிறிஸ்துவில் காணப்பட்டது. என்று பொருள்படும். (கொலோசெயர்2:9; எபேசியர்1:23; 3:19, யோவான்3:34). இயேசு கிறிஸ்து குமாரனாகிய தேவனாக இருக்கிறார். (மத்தேயு1:21-23; யோவான்1:1-2; ரோமர்9:5; எபிரெயர்1:8).

ஆ. வசனம்19. "...பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும், அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும்..." கிறிஸ்துவுக்குள், தேவனுடைய சகல பரிபூரணமும் வாசமாயிருப்பதினால், தேவனுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையே நடுவாக இருந்து செயலாற்றுவதற்கு, முற்றிலும் போதுமான ஒருவராக இருக்கிறார் "ஒப்புரவாக்கிக்கொள்ள" என்றால் தேவனுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையே எல்லா பகையையும் நீக்கி (எதிர்த்துக் கலகம் செய்த தூதர்கள் மற்றும் அவிசுவாசிகளான மனிதர்களையும் தவிர்த்து) சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் கொண்டுவருவது என்று பொருள்படும்.

இ. வசனம் 20. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி..." "சமாதானம்" என்றால், மன இசைவு அல்லது மன இணக்கத்திற்கு வருதல் என்று இங்கு பொருள்படும். வானத்திலும் பூமியிலும் சிருஷ்டிக்கப்பட்டவைகள், சிருஷ்டிகரோடு, எதிர்த்துப்போராடிக் கொண்டிருந்தன, எனவே அவரோடு ஒப்புரவாகவேண்டிய அவசியம் இருந்தது. கிறிஸ்து கல்வாரி சிலுவையில் சிந்தின இரத்தத்தினால், தேவனுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையே இணக்கமும், ஒருமைப்பாடும் ஏற்பட்டது. (ரோமர்8:19-23).

ஈ. வசனம் 21. முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த இந்த வாக்கியத்தின் கடைசி பாகம், ஒருவேளை இவ்வாறு வாசிக்கப்படலாம்: "உங்களுடைய பொல்லாத நடக்கையினால் காணப்பட்டபடி" வானலோகத்துடன் ஒப்புரவாக்கப் படுவதிலிருந்து, மானிடர்களுடன் ஒப்புரவாக்கப்படுவதற்கு, பவுல் வருகிறார். ரோமருக்கு எழுதின நிருபத்தில் பவுல் இவ்வாறு கூறுகிறார். "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே, அவருடனே ஒப்புரவாக்கப் பட்டோம்..." (ரோமர் 5:1,10).

உ. வசனம் 21. "....உங்களை பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்", நாம் கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படவும், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கோபாக்கினையிலிருந்து விடுவிக்கப்படவும், பிராயச்சித்த பலியாகிய அவருடைய மரணத்தைச் சார்ந்திருப்போமானால், நாம்,

கிறிஸ்துவின், எல்லாவற்றிற்கும் மேலான மிக உன்னத பதவி கொலோசெயர் 1:15-23

1. தேவனுடைய பார்வையில் பரிசுத்தமாக இருப்போம்-நீதிமான்கள், தூய்மையுள்ளவர்கள், மற்றும் சன்மார்க்க சம்பந்தமாக சுபடற்றவர்கள் என்று அறிவிக்கப்படுவோம்.

2. குற்றமற்றவர்களாக இருப்போம்-சன்மார்க்க விஷயங்களில் கறையற்றவர்களாவோம் அல்லது களங்கமற்றவர்களாவோம்.

3. கண்டிக்கப்படாதவர்களாக இருப்போம் - தேவனுக்கு விரோதமாக செய்த எல்லா தவறுகளிலிருந்தும் விடுவிக்கப்படுவோம். (ரோமர் 8:3,33-34).

ஊ. வசனம்22. "நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல் ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்" தேவனோடு முடிவாக ஒப்புரவாக்கப்படுவோம் என்ற வாக்கியத்தில் "இருந்தால்" என்ற சொல் கொடுக்கப்பட்டுள்ளது. (நமக்கு இடையே எல்லா பகையும் எடுக்கப்படவும் நமக்கு இடையே சமாதானமும், ஒருமைப்பாடும் கொண்டுவரப்படவும்). நாம் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தில் தொடர்ந்து கடைசிவரை நிலைத்து "இருந்தால்" அப்படியாகும். (ரோமர் 11:22; 1கொரிந்தியர்15:2; எபிரெயர் 3:6)

முடிவுரை

அ. கிறிஸ்து, கீழ்க்கண்டவற்றின் மீது மகா உன்னத அதிகாரி என்று பிதாவாகிய தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

1. சிருஷ்டிகள் மீது.

2. சபையின் மேல்.

3. சிருஷ்டிகள், சிறப்பாக மானிடவர்க்கம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட உண்மையில் அவர் ஒருவரே, மானிடர்களை தேவனுடன் ஒப்புரவாக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறார். எல்லா பகையையும் நீக்கி, சமாதானத்தையும், ஒருமைப்பாட்டையும், அவர்களுக்கிடையே கொண்டுவரும்படியாக (1தீமோத்தேயு2:5).

ஆ. நம்மில் ஒவ்வொருவரும், கீழ்க்கண்ட கேள்விகளுக்கு, எப்படியிருப்பினும் பதிலளிக்கவேண்டியது அவசியம்:

1. நீ, இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டுள்ளாயா?

2. கிறிஸ்துவின் வருகையைப்பற்றி நம்பிக்கை, மற்றும் சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளப்படும்போது உன்னுடைய சரீரம் உயிர்ப்பிக்கப்படுவது, ஆகிய இவைகளினால் நீ அசைக்கப்பட்டிருக்கிறாயா?

அப்போஸ்தலரின் ஊழியம் கொலோசெயர் 1:24-29

முன்னுரை

அ. கொலோசெயர்1:1-23 வசனங்கள் நான்கு தெளிவான பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. 1:1-2 -பவுலின் வழக்கமான வாழ்த்துரைகள்.

2. 1:3-8 -எப்பாப்பிராவின் ஊழியத்தின் மூலமாக சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிகளான கொலோசே பட்டணத்திலுள்ளவர்களுக்காக அவர் தேவனுக்குத் துதி செலுத்துகிறார்.

3. 1:9-14 -அப்போஸ்தலரின் ஜெபத்தை விளக்கி எழுதுகிறார்.

4. 1:15-23- சிருஷ்டி, சபை மற்றும் ஒப்புரவாக்கும் ஊழியம் ஆகிய இவற்றின்மீது கிறிஸ்துவினுடைய மகா உன்னத அதிகாரத்தை விவாதித்து எழுதுகிறார்.

ஆ. இன்றைய நமது வேத பாடத்தில், பரிசுத்த ஆவியானவர், பவுல் அப்போஸ்தலன் மூலமாக அப்போஸ்தல ஊழியத்தைப் பற்றிக்கூறிய கருத்துக்களின் விளக்கத்தின் சில பாகங்களைப் பற்றி அறியலாம்.

1. அப்போஸ்தலர்கள் சபையின் நிமித்தமாகக் கிறிஸ்துவோடு பாடுகளை அனுபவிக்கின்றனர். (1:24).

அ. வசனம்24. "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து..." "சந்தோஷமடைவது" என்றால் மகிழ்ச்சியடைவது அமைதலாகக் களிகூருவது, உள்ளத்தில் உவகையடைவது என்று பொருள்படும். சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதிலும், விசுவாசிகள் மத்தியிலும், சபையிலும் ஊழியம் செய்ததினால் ஏற்பட்ட கஷ்டங்கள் மற்றும் சரீரம், உள்ளத்தில் ஏற்பட்ட வேதனைகள், ஆகிய இவையாவற்றிலும், பவுல் உண்மையில், இருதயபூர்வமாக சந்தோஷமடைந்தார்.

ஆ. பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில், "நான் அவரையும் (கிறிஸ்துவையும்) அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்..., என்று கூறுகிறார். (பிலிப்பியர் 3:10; எபிரெயர்12:2) பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் கிறிஸ்துவினிமித்தம் பட்ட பாடுகளைக் குறித்து விளக்கமாக விவரித்துக்கூறுகிறார். (2கொரிந்தியர் 4:8-12; 6:4-8, 11:23-29; ரோமர் 8:35-37).

இ. வசனம் 24 "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை, அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்தில் நிறைவேற்றுகிறேன். "நிறைவேற்றுகிறேன்" என்றால் பதிலாளாக இருக்கிறேன் அல்லது கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்ளுகிறேன் என்று பொருள்படும். "கிறிஸ்துவின் உபத்திரவங்கள்" என்பது, மிக்க வேதனை, துன்பப்படுத்தப்படுவது, தொல்லைகள் ஆகியவைகளை அவர் (இயேசு) பூமியில் அவருடைய ஊழிய காலத்தில் தம் சரீரத்தில் சகித்தார்.

ஈ. பவுல் (மற்ற ஒவ்வொரு பரிசுத்தவான்களும்) சகித்த இந்த உபத்திரவங்கள், கிறிஸ்து அனுபவித்த வேதனை, துன்பங்கள் மற்றும் தொல்லைகளின் தொடர்ச்சியாக (விரிவாக்கப்பட்டதாக) இருக்கிறது. (மத்தேயு10:24-25 5:10,12; யோவான்15:20, விசேஷமாக 2தீமோத்தேயு 3:12).

அப்போஸ்தலரின் ஊழியம் கொலோசெயர் 1:24-29

உ. வசனம் 24. "...அவருடைய சரீரமாகிய சபைக்காக..." கிறிஸ்து நெருங்கிய உறவாக அவருடைய சபையை-சரீரத்தின் அங்கமான ஒவ்வொரு விசுவாசியையும் - (எபேசியர் 5:23,25,29) பற்றி கவலைப்படுகிறார் மற்றும் நேசிக்கிறார் என்று பவுலுக்குத் தெரியும். ஆகவே அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் இதில் குறைவுபடக்கூடாது. (யோவான் 21:15-17) கிறிஸ்துவுக்காகவும் அவருடைய சபைக்காகவும், எந்த வேதனையும், உபத்திரவமும், தொல்லைகளும் அனுபவிப்பது மிக அதிகம் என்று கூறுவதற்கு இல்லை.

2. வசனத்தைப் பூரணமாய் அறிவிக்க அப்போஸ்தலர்கள் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (1:25-27)

அ. வசனம் 25. "...தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே...ஊழியக்காரனானேன்". "ஊழியக்காரனாவது" என்றால், செய்தியை எடுத்துக்கொண்டு தூர இடங்களுக்குச் செல்வது ஒரு வேலைக்காரனைப்போல் வேலை செய்வது, கீழ்த்தரமான வேலைகளை நிறைவேற்றுவது என்று பொருள்படும். ஊழியக்காரன் மற்றும் ஊழியக்காரிகளுக்கும் இந்தச் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. உபதேசிப்பவன், போதகர், சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் தூதுவராக, விசுவாசிகள் மத்தியிலும், சபைகளிலும் பல ஊழியங்களில், பங்கு பெற்றுவந்த பவுலை இங்கு இது குறிப்பிடுகிறது.

ஆ. "தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே...." அவருடைய இந்த சுவிசேஷ ஊழியத்தைக் கிறிஸ்துவிடமிருந்து அவர் நேரடியாகக் பெற்றுக்கொண்டார். (அப்போஸ்தலர் 9:15-17; எபேசியர் 4:11). ஆகவேகிறிஸ்துவால் அழைக்கப்பட்டு, சபைக்கு ஈவாகக் கொடுக்கப்பட்ட எல்லா மனிதர்களைப் போல பவுல், அவனுடைய வேலையை தனக்குக் கிடைத்தத் தனி சுதந்திரமாகவும், நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்ட பரிசுத்த ஊழியமாகவும் கருதினான். கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில், "உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே", என்று அவர் கூறுகிறார். (1கொரிந்தியர் 9:17).

இ. வசனம் 25. "தேவ வசனத்தை உங்களுக்குப் பூரணமாய்த் தெரியப்படுத்துவதற்கு" "உங்களுக்கு" என்பது கொலோசே பட்டணத்திலுள்ள விசுவாசிகளைக் குறிப்பிடுகிறது. ஆகிலும், இது எல்லா புறஜாதியார்களையும் உள்ளடக்கும். தீமோத்தேயுவிற்கு எழுதின இரண்டாம் நிருபத்தில், பவுல் இவ்வாறு கூறுகிறார். "கர்த்தரோ ....என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்". (2தீமோத்தேயு4:17; ரோமர்15:19; எபேசியர்3:8; அப்போஸ்தலர்9:15, 13:46-47, 22:21). இது இங்கு இவ்வாறு பொருள்படுகிறது, எல்லா புறஜாதியாரின் உலகத்திற்கும் சுவிசேஷ செய்தியை எடுத்துச்செல்ல பவுல், தேவனால் (கிறிஸ்து மூலமாக) அழைக்கப்பட்டான். (கலாத்தியர் 1:15-16).

ஈ. வசனம் 25 - "ஆதிகாலங்களுக்கும், தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து,

அப்போஸ்தலரின் ஊழியம்
கொலோசெயர் 1:24-29

இப்பெழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்..." "இரகசியம்" என்பது, வெளியாக்கப்படாத அல்லது யாவரும் அறிய திறந்து காட்டப்பட்ட ஒரு காரியம். "ஆதிகாலங்களுக்கும், தலைமுறைகளுக்கும்" என்பது, கடந்த காலத்தில் வாழ்ந்த மக்களைக் குறிக்கும். (நல்ல மற்றும் கெட்ட தூதர்களையும் குறிக்கும் சாத்தியமுண்டு). கடந்த காலத்தில் வாழ்ந்த ஒருவரும் அறியாத, இந்த தேவனுடைய வார்த்தை இப்பொழுது திறந்து வைக்கப்பட்ட அல்லது முழுவதும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டதாக பரிசுத்தவான்களுக்கு (பரிசுத்தமாக இருப்பவர்கள், உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் (ரோமர்16:25-26) வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உ. வசனம்27. "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்" பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தப்பட்ட, இந்த "தேவனுடைய வார்த்தை" "மகிமையின் ஐசுவரியத்திற்கு" ஒப்பானது என்று பவுல் கூறுகிறார். இது மிகவும் விலையேறப்பெற்றது, தெய்வீக முக்கியத்துவம் பெற்றது என்று பொருள்படும்; இதைச் சொந்தமாகப் பெற்றிருப்பவர்கள் மிகுந்த ஐசுவரியவான்களாயிருப்பார்கள்.

ஊ. இது யூதர்களைப் போலவே புற ஜாதியார்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டு, கிறிஸ்துவுக்குக் கீழ் ஒரே சரீரமாக இருக்கவேண்டும்,

என்பதே ஆதியிலிருந்து தேவனுடைய விருப்பமாக இருந்தது என்று அவர் அதிக முக்கியமாக இங்கே கூறுகிறார். (ரோமர் 9:22-26; எபேசியர்1:9-10, 2:13-18, 3:6). இது நிச்சயமாகவே, ஆதியிலிருந்து மனிதர்களுக்கு மறைக்கப்பட்ட, வெளிப்பாடு! இது அநேக யூதர்களுக்கு இன்னும் மறைக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது!.

எ. வசனம்27. "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்". பரிசுத்தவான்களால் அறியப்பட்டு, புறஜாதிகள் மத்தியில் அறிவிக்கப்பட்ட, வெளிப்படுத்தப்பட்ட "இரகசியம்", "கிறிஸ்து உனக்குள் இருக்கிறார்" என்பதாகும். இது ஒரு சமயம் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கலாம்.

1. புதிய பிறப்பில், ஒரு விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவர் வந்து வாசம்பண்ணுகிறார். (யோவான் 3:3-8, 14:17,20; ரோமர் 8:9; 1கொரிந்தியர் 6:19; 12:13).

2. இது பரிசுத்த ஆவியால்பெறும் ஞானஸ்நானத்தையும் சேர்த்து குறிப்பிடலாம். (லூக்கா24:49; அப்போஸ்தலர்1:8, 2:1-4; எபேசியர் 1:13-14; 2கொரிந்தியர் 5:5; கலாத்தியர் 3:2,5).

ஏ. "மகிமையின் நம்பிக்கை" என்பது, ஒரு நாள் பரிசுத்தவான்கள், தேவனுடைய மகிமையை தரிசித்து, நித்தியத்தில் அவருடைய சமுகத்தில் வாசம் பண்ணுவார்கள். என்று மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக், காத்துக் கொண்டிருப்பதை குறிக்கும். (தீத்து 2:13; கொலோசெயர் 3:4; ரோமர் 5:2, 8:17). இயேசு நமக்குள் ஜீவிக்கிறார் என்பது, நித்திய ஜீவனைப் (நம்பிக்கையுடன்) பெற்றிருக்கிறோம் என்று பொருள்படும் (ரோமர்8:11; 1யோவான் 5:10-12).

அப்போஸ்தலரின் ஊழியம் கொலோசெயர் 1:24-29

3. சபையிலுள்ள விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர்கள் புத்திசொல்லி உபதேசித்தார்கள். (1:28-29).

அ. வசனம் 28 "....அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி ,....எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" "அறிவித்து" என்றால், தெரியப்படுத்துவது, கற்றுத்தருவது என்று பொருள்படும். ஆகவே அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை அறிவித்தார்கள்.

1. உலகத்தை மீட்கும் நற்செய்தியாக,

2. அவர்கள் உபதேசத்தைக்கேட்டு இரட்சிப்டையும் படியாக,

ஆ. "புத்திசொல்லி" என்றால், எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுவது, ஜாக்கிரதையாக இருக்கும்படி ஒலி எழுப்புவது, விசுவாசிகளின் வாழ்க்கையில் தானாகவே வெளிப்படுத்தப்படும் சன்மார்க்க தவறுதல்களை திருத்துவது, என்று பொருள்படும். "எல்லா ஞானத்தோடும்" என்பது, ஆவிக்குரிய ஞானம், கிறிஸ்துவில் மட்டும் காணப்படும் எல்லா தெய்வீக ஞானம், ஆகியவற்றைக் குறிக்கும்.

இ. ஆகவே, கிறிஸ்துவில் மட்டும் காணப்படும் எல்லா தெய்வீக ஞானத்தோடும் உபதேசம்பண்ணவேண்டிய உத்திரவாதத்தால் அப்போஸ்தலர்கள் நிரப்பபட்டிருந்தார்கள். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு வேத வசனங்கள் வடிவில், இவற்றில் அதிகமானவற்றை, இப்பொழுது நாம் பெற்றிருக்கிறோம்.

தெய்வீக ஞானம் வேதவசனங்களில், சிறப்பாகப் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. எனவே, உலகத்திற்குப் பிரகடனப்படுத்தவும், விசுவாசிகளுக்கு புத்திசொல்லவும் உபதேசிக்கவும், அப்போஸ்தலர்கள் இதை (வேதவசனங்களை) பயன்படுத்த வேண்டும்! (2தீமோத்தேயு 3:15-17).

ஈ. வசனம் 28. "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு..." "எந்த மனுஷனையும் நிறுத்தும்படிக்கு" சபை மகிமையாக மேகங்களுக்கு மேலே எடுத்துக்கொள்ளப்படும்போது, விசுவாசிகள் கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்பதை இது குறிப்பிடுகிறது. (2கொரிந்தியர்11:2; 1தெசலோனிக்கேயர் 2:19-20) "தேறினவனாக, நிறுத்தும்படிக்கு என்றால் ஆவிக்குரிய வாழ்க்கையில் பூரணமாக வளர்ந்து, முதிர்ச்சியடைந்தவர்களாக கிறிஸ்துவுக்குப் படைக்கப்பட, என்று பொருள்படும்.

1. அவர்களுடைய விசுவாசத்திலும், கிறிஸ்துவைப்பற்றி அறிகிற ஞானத்திலும்,

2. கிறிஸ்துவைப்போன்ற சன்மார்க்க நடக்கையுள்ளவர்களாக (எபேசியர்4:12-15; 2கொரிந்தியர்3:18).

உ. வசனம்29. "அதற்காக ....போராடிப் பிரயாசப்படுகிறேன்" "போராடி" என்றால் கடினமாக வேலைசெய்வது, ஒரு மனிதன் களைப்படையும்வரை உழைப்பது, என்று பொருள்படும். "பிரயாசப்படுகிறேன்" என்றால், வேதனைப்படுவது, ஒரு பரிசைப்பெற போட்டியிடுவது, ஒரு எதிரியோடு நேருக்குநேர் சண்டையிடுவது, ஒரு வேலையை முடிப்பதற்காக கடினமாக முயற்சிசெய்வது, என்று பொருள்படும். இந்தச் சொல் விளையாட்டு அரங்கத்தில் பேசப்படும் வார்த்தைகளிலிருந்து வந்தது. இது, விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் காலங்களில், காணப்படும் மிகக்கடின முயற்சியைக் குறிக்கும்.

**அப்போஸ்தலரின்
ஊழியம்
கொலோசெயர் 1:24-29**

ஆண்களையும் பெண்களையும், இரட்சிப்புக்குள் கொண்டுவந்து, ஆவியில் முழுவதும் வளர்ந்து, முதிர்ச்சியடைந்தவர்களாக, அவர்களைக் கிறிஸ்துவுக்குமுன்படைக்க பவுல் பிரயாசப்பட்டுக், கடினமாக முயற்சி செய்தார்.

ஊ. வசனம் 29 "....எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி...." "பலத்தின்படி" என்றால் மிகத்தேர்ந்த பலனளிக்கும் சக்தி, அற்புதமான கிரியை, என்று பொருள்படும் "அவருடைய" என்பது கிறிஸ்துவைக் குறிக்கும். அவர் (பவுல்) மூலமாக வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் அற்புத வல்லமையினால், பவுல் பலனளிக்கும் ஊழியத்தை நிறைவேற்றினார். (எபேசியர் 3:7,20; எபேசியர்1:19).

எ. அவிசுவாசிகளுக்கு சுவிசேஷ ஊழியம் செய்து, அவர்கள் சீஷர்களாகி, கிருபையிலும் கிறிஸ்துவைவைப்பற்றி அறிகிற அறிவிலும் வளர்வதைக் காண கடினமாக முயற்சிசெய்யும் ஒவ்வொரு அப்போஸ்தலர்களுக்கும், ஆவிக்குரிய தலைவர்களுக்கும் மற்றும் விசுவாசிகளுக்கும், இது இன்று பொருத்தமானதாக இருக்கும்.

முடிவுரை

அ. கொலோசே பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு எழுதின இந்த நிருபத்திலிருந்து, ஒரு அப்போஸ்தலனின் ஊழியத்தைப்பற்றிய சுருக்கமான விளக்கம் நமக்கு கிடைத்திருக்கிறது. கீழ்க்கண்டவைகளும் இத்துடன் சேர்க்கப்படலாம்:

1. சபைக்காகக் கிறிஸ்துவுடன் பாடனுபவிக்க

2. வேத வசனத்தைப் பூரணமாக அறிவிக்க தேவனால் அனுப்பப்படுவது.

3. சுவிசேஷ செய்தியை அறிவிக்கவும், அதை ஏற்றுக்கொண்டவர்களுக்குப் புத்திசொல்லி உபதேசிக்கவேண்டும்.

ஆ. ஆகிலும், இந்த ஊழியம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் என்ற எல்லைக்குட்பட்டதல்ல. சுவிசேஷ செய்தியை அறிவிப்பதிலும், கிறிஸ்துவுடன் பாடனுபவிப்பதிலும், சிறப்பாக மற்ற ஆவிக்குரிய தலைவர்களும் அவ்வாறே மற்ற விசுவாசிகளும் இத்துடன் சேர்க்கப்படுவார்கள்.

நம்முடைய பாவங்களில் மரித்த நிலை கொலோசெயர் 2:13-15

முன்னுரை

அ. 10-15 வசனங்களில், கிறிஸ்து எல்லா வல்லமைகளுக்கும் அதிகாரங்களுக்கும் மேலாக தலைவராக இருக்கிறார் என்று பவுல் அறிவிக்கிறார். (எபேசியர் 1:21-22). இக்காரணத்தினால் எல்லா பொல்லாத சக்திகள் மற்றும் அதிகாரங்கள் நம்முடைய வாழ்க்கையில் செலுத்தும் ஆதிக்கத்தை, அவர் மேற்கொள்ள முடியும். கீழ்க்கண்டவைகளும் இதில் அடங்கும்.

1. பாவ சுபாவத்தை நீக்க (வசனம்11)

2 பாவத்துக்கு மரிக்க முடியும். இதற்கு ஜலத்தில் எடுக்கும் ஞானஸ்நானம் அடையாளமாயிருக்கிறது. (வசனம்12).

3. புதிய சன்மார்க்க ஜீவியம் வாழமுடியும் (வசனம்12).

4. பாவத்தை மன்னிக்க முடியும் (வசனம்13).

5. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் எதிர் பார்க்கும் தேவைகளை நிறைவேற்றவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து விடுவிக்கும். (வசனம்14).

6. பொல்லாத சக்தி மற்றும் அதிகாரத்திலிருந்து விடுதலை.

ஆ. பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின்படி நிறைவேற்றப்பட வேண்டிய, பாவத்திலிருந்தும் பொல்லாத சக்திகள் மற்றும் அதிகாரத்திலிருந்தும் விடுதலையாக்கப்படவும்,

இந்த பாடப் பகுதியின் முதன்மையான முக்கியக் கருத்தாக இருக்கிறது. நம்முடைய பாவங்களில் நாம் மரித்த நிலையில் இருக்கும்போது, அவர் (இயேசு) இதை நமக்குச் செய்தார் என்பது இங்கு காணப்படும் மிக விசேஷித்த உண்மையாக இருக்கிறது.

1. நாம், நம்முடைய பாவங்களில் மரித்து இருக்கும்போது, கிறிஸ்துவோடு கூட உயிர்ப்பிக்கப்பட தேவன் கிருபை செய்தார். (2:13-14).

அ. வசனம் 13. "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்சவிருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களை...." "நம்முடைய பாவங்களினாலே நாம் மரித்தவர்களாயிருக்கும்போது,'' என்றால் நாம் கிறிஸ்தவர்களாவதற்குமுன், சன்மார்க்க மற்றும் ஆவிக்குரிய சத்தியங்களுக்கு மரித்த பிணம்போலவும், அஞ்ஞானிகளாகவும் இருந்தோம் என்று பொருள்படும். நாம் தவறான அடி எடுத்து வைத்தோம், சன்மார்க்கக் காரியங்களில் தவறிழைத்தோம், சன்மார்க்கமாக சரியானவற்றிலிருந்தும், உண்மையிலிருந்தும் விலகிச்சென்றுவிட்டோம்.

ஆ. பாவத்தின் (துன்மார்க்க நடத்தை) சம்பளம் (கூலி) ஆவிக்குரிய மரணம் அல்லது தேவனுடைய சமூகத்திலிருந்து விலக்கப்பட்டு, நித்தியகால முழுவதும் நரக அக்கினியில் போடப்படுவது, என்றும் இது பொருள்படும். (ரோமர்6:23; 2தெசலோனிக்கேயர்1:9; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15).

இ. "உங்கள் மாம்ச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களை...." நாம் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு முன், ஆவியிலும், நீதிநெறி நடத்தையிலும் மரித்தவர்களாயிருந்தோம் என்பதை இதுவும் குறிப்பிடுகிறது.

நம்முடைய பாவங்களில் மரித்த நிலை கொலோசெயர் 2:13-15

அந்தக் காலங்களில், நம்முடைய புதுப்பிக்கப்படாத பாவ சுபாவத்தின் விருப்பங்களின்படி நடக்க நாம் கட்டாயப்படுத்தப் பட்டோம். (ரோமர் 7:15-23; கலாத்தியர் 5:19-21).

ஈ. யூதர்களுடைய ஆலோசனைச் சங்கத்தார்களிடம் ஸ்தேவான், "வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே...''என்று சொன்னபோது, ஸ்தேவானும் இந்தப் பொருள்படவே, கூறினான். (அப்போஸ்தலர்7:51; எரேமியா4:4,9:26).

உ. வசனம் 13,14. "தேவன் உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து...'' சன்மார்க்கத்திற்கும் ஆவிக்குரிய சத்தியங்களும் மரித்த பிணம்போலவும், நீதிநெறிகளுக்கும், சத்தியத்திற்கும் விலகி நடந்தவர்களாகவும் நாம் இருந்தபோது தேவன் கிறிஸ்துவோடுகூட நம்மை உயிர்ப்பித்தார். கிறிஸ்துவோடுகூட உயிர்த்தெழுதலில் நாம் அடையாளமாக இணைக்கப்பட்டு, புதிதாக்கப்பட்ட வாழ்க்கை வாழுகிறோம். கிறிஸ்துஇயேசு நடந்ததுபோல நடக்கிறோம். (ரோமர்6:4; 1யோவான் 2:6; 2கொரிந்தியர்5:17; கலாத்தியர்6:15). சபை மகிமையாக மேகங்களுக்குமேலாக எடுத்துக்கொள்ளப்படும் போது, நம்முடைய சாவுக்கேதுவான சரீரங்கள் உயிர்ப்பிக்கப்படும் என்ற வாக்குத்தத்தமும் இதில் அடங்கியுள்ளது.

ஊ. "கிறிஸ்துவோடுகூட உயிர்ப்பிக்கப்படுவோம்" என்பதின் முழு பொருளுடன் கீழ்க்கண்ட கருத்துக்களும் சேர்க்கப்படும்.

1. "நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் அவர் மன்னித்தார்''-நீதிநெறிகளை நாம் மீறிநடந்ததையும், தேவனுடைய சன்மார்க்கக் கற்பனைகளை எதிர்த்து விலகிச்சென்றவைகள் யாவற்றையும் அவர் மன்னித்துவிட்டார். "மன்னிப்பு" என்பது, ஒருவருக்கு, அவருடைய தகுதியைப்பார்க்காமல் காட்டப்படும் கருணை; அவர்களுக்கு மன்னிப்பை அளிப்பது என்று பொருள்படும் (லூக்கா7:41-42).

2. "நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து...." கிறிஸ்துஅவருடைய பிராயச்சித்த பலியாகிய மரணத்தில் வேதனைப்பட்டபோது, பழைய ஏற்பாட்டிலுள்ள தேவனுடைய சன்மார்க்க விதிகளையும், அத்துடன் சேர்ந்த விரிவாக விளக்கப்பட்ட ஒழுங்குமுறைகளையும், நம்மைப் பொருத்தவரை பலனற்றதாக நீக்கிவிட்டார் (ஒழித்துவிட்டார், ஒன்றும் இல்லாமல் தள்ளிவிட்டார்) (எபேசியர்2:15; எபிரெயர்8:13, 9:12) அது இனி ஒருபோதும் நமக்கு விரோதமாக நிற்காது. "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால்...." என்று பவுல் இந்த அர்த்தத்தோடே தான் கூறுகிறார் (ரோமர் 6:14).

3. "நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால்நமக்கு விரோதமாகவும் இருந்த...." பழைய ஏற்பாட்டு சன்மார்க்கக் கற்பனைகள், கிறிஸ்துவோடு உயிர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு தடையாக இருக்கிறது. அது இடைவிடாமல் நம்மை பாவிகள் என்று நியாயந்தீர்க்கிறது. ஆனால் நம்முடைய பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கும் காரியத்தில் பயனற்றது; எனவே அது வல்லமையற்றது (ரோமர் 7:7; 8:1-3).

நம்முடைய பாவங்களில் மரித்த நிலை கொலோசெயர் 2:13-15

எ. வசனம் 13-14, பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் உள்ள கீழ்க்கண்ட வார்த்தைகளுக்கு ஒப்பாக இருக்கிறது; "...நாம் பலனற்றவர்களாயிருக்கும், போது.... பாவிகளாயிருக்கையில், நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் ...கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவனுடைய கோபாக்கினைக்கு நீங்கலாக இரட்சித்தார் (ரோமர்5:6-10).

2. நாம் பாவங்களில் மரித்தவர்களாயிருக்கையில், தேவன் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார் (2:15).

அ. "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு.. "உரிந்துகொண்டு", என்றால், ஆயுதங்களை எடுத்துவிடு, நிராயுதபாணியாக்கு, எல்லாவற்றையும் நீக்கிவிடு, களைந்துவிடு என்று பொருள்படும். "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்" என்று, பகைக்கும் ஆவியோடிருக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளையுடயவனையும் சாத்தானும் அவனுடைய பொல்லா தூதர்களின் (சேனை -பிசாசுகள்) இந்த உலகத்திலுள்ள அந்தகார லோகாதிபதிகளையும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளையும் குறிக்கும். (எபேசியர்6:12, 2:2; யோவான் 14:30; மார்கு 3:22).

ஆ. போர்காலத்தில், தோற்கடிக்கப்பட்ட ஒரு விரோதியின் சேனையை இங்கு கற்பனையில் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது.

விரோதியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொல்லாத சக்திகளைக் கிறிஸ்து தோற்கடித்து, அவர்களுடைய முழுதோல்விக்கும், தாழ்மைப்படுத்தப்பட்டதற்கும் அடையாளமாக, அவர்களுடைய போராயுதங்களை மட்டும் அல்லாமல், அவர்களுடைய வஸ்திரங்களையும் களைந்து உரிந்துபோட்டார்.

இ. "வெளியரங்கமான கோலமாக்கி", இங்குஅந்தக் கற்பனை உருவகம் தொடர்கிறது. சாத்தான் மற்றும் அவனுடைய பிசாசுகளின் சேனை ஆகிய இவைகளின் போர் ஆயுதங்களையும், அவைகளின் ஆடைகளையும் உரிந்துபோட்டபின்பு, கிறிஸ்து அவருடைய வெள்ளைக் குதிரையின்மீது ஏறி, அவருடைய சேனையை இப்பிரபஞ்சத்தின் தெருக்களின் வழியாக நடத்திச் செல்லுகிறார். இதற்கு நேர் பின்னால் தாழ்மைப்படுத்தப்பட்டு தோற்கடிக்கப்பட்ட சாத்தானும் அவனுடைய பிசாசுகளின் கூட்டமும் நடந்துவருகின்றன. இந்த உலகத்தின் அந்தகார லோகாதிபதிகள் மற்றும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள், ஆகிய இவற்றின்மீது, கிறிஸ்து முற்றிலும் வெற்றிசிறந்த இந்த காட்சியை வானலோகத்திலுள்ளவர்களும், பூமியின் குடிமக்களும் காண்கிறார்கள்.

ஈ. நம்முடைய பாவங்களில் நாம் மரித்திருக்கும் நிலையிலும், பலனற்ற பாவிகளாயிருக்கையிலும், தேவனுக்கு விரோதமாகப் போராடிக்கொண்டிருக்கும் போதும், கிறிஸ்து இவையாவற்றையும் நமக்காகச் செய்தார். என்ன அற்புதமான ஒரு மீட்பர்! எவ்வளவு கிருபையுள்ள தேவன்!.

1. நம்முடைய பாவங்களை மன்னித்தார்

2. நமக்கு விரோதமாக நின்ற பழைய ஏற்பாட்டு விதிகளை அழித்துப்போட்டார். இவற்றை மட்டுமல்லாமல்.

**நம்முடைய பாவங்களில் மரித்த நிலை
கொலோசெயர் 2:13-15**

3. அவைகளின் அதிகாரத்தின் கீழ் நம்மைக் கட்டிவைத்திருந்த பொல்லாத ஆவிக்குரிய சக்திகளின் போராயுதங்களைக் களைந்துபோட்டார்.

4. அடுத்த குறிப்பில் நாம் பார்க்கப்போவது போல, சிலுவையில் அவருடைய மரணத்தினால் வெற்றி சிறந்தார்.

உ. "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே, தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (1யோவான்3:8) என்று யோவான் சொல்லும்போது, இப்பொருள்படவே கூறுகிறார். நம்முடைய வாழ்க்கையில் பாவம் இருக்கசெய்வதும், அதன் தொடர்பாக நியாயந்தீர்க்கப்படுவதை நிறைவேற்றுவதுமே அவனுடைய வேலை'

3. நம்முடைய பாவங்களில் நாம் மரித்தவர்களாயிருக்கையில், பொல்லாத சக்திகள் மற்றும் அதிகாரங்களின் மீது தேவன் வெற்றிசிறந்தார். (2:15).

அ. "வெற்றி சிறந்தார்" என்றால் தோற்கடித்தார், வென்று ஜெயம் அடைந்தார், என்று பொருள்படும். இந்த உலகத்தின் அந்தகார லோகாதிபதிகள், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள் ஆகிய இவைகளின் மீது கிறிஸ்து வெற்றி சிறந்தார். அவைகளை அவர் தோற்கடித்தார்!

ஆ. "சிலுவையின்மேல் ஆணியடித்து". எப்படி நடந்தது என்ற கேள்விக்கு இது பதில் தருகிறது.

அவமான சிலுவையில், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து அறையப்பட அனுமதித்ததினால் தேவன் இந்த உலகத்திலும், வான மண்டலங்களிலுமுள்ள பொல்லாத சக்திகள் மற்றும் அதிகாரங்கள் மீது வெற்றி சிறந்தார்.

இ. அவனுடைய உடைமைகளை கொள்ளையாடும் படியாக, சிலுவையின் மூலமாகக் கிறிஸ்து, பலவானுடைய வீட்டிற்குள் பிரவேசித்து அவனைக் கட்டிப் போட்டார். (மத்தேயு 12:29)

ஈ. சிலுவை, மரணத்திற்கு அடையாளம் என்று நாம் எப்போதும் போதிக்கப்பட்டிருக்கிறோம். இப்போதும் கூட இது உண்மையாயிருக்கிறது. இந்த உலகத்திலும் வானமண்டலங்களிலும் இருக்கிற ஆவிக்குரிய பொல்லாத சக்திகளின் மீது வெற்றி சிறக்க, இது தேவனுடைய கருவியாக இருக்கிறது என்று பவுலும் கூறுகிறார்.

உ. கொரிந்தியருக்கு எழுதின அவருடைய முதலாம் நிருபத்தில், இவ்வாறு அவர் சொல்லுகிறார்: "அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" (1கொரிந்தியர் 2:8)

முடிவுரை

அ. இந்த உலகத்திலும், வானமண்டலங்களிலும் உள்ள எல்லா வல்லமைகளுக்கும் அதிகாரங்களுக்கும் மேலாக கிறிஸ்துவின் ஞானம் இருக்கிறது. இந்த வாழ்க்கையில் முறியடிக்கப்பட்டு நம்பிக்கையிழந்து பொல்லாத சக்திகளின் அதிகாரத்திற்குக் கீழ் இருக்கும், ஆண்கள் மற்றும் பெண்களின் ஒரே நம்பிக்கையாக இது நிலைத்திருக்கிறது.

நம்முடைய பாவங்களில் மரித்த நிலை
கொலோசெயர் 2:13-15

இந்த சிருஷ்டிப்பில் அடங்கிய எல்லா சக்திகளும் அவருக்குக் கீழ் அடங்கி உள்ளது.

ஆ. எல்லா ஆண்களும் பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும், தங்களைக் கிறிஸ்துவுடன் இணைத்துக்கொண்டு, கீழ்க்கண்ட காரியங்களை நடப்பிக்க,

1. சன்மார்க்க வாழ்வில் ஜீவிக்க,

2. அவர்களுடைய பாவங்களிலிருந்து மன்னிப்படைய.

3. அவர்களுக்கு விரோதமாக நின்று,அவர்களை நியாயந்தீர்க்கும் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்ட சன்மார்க்க விதிகளை அழித்துவிட, அவரை அனுமதிப்பார்களானால், அவர், அவர்களுக்குக் கொடுக்க விரும்பும், சுதந்தரத்தையும் விடுதலையையும் அவர்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கலாம். அவர் கல்வாரி சிலுவையில் மரித்தபோது, சுதந்திரமும் விடுதலையும் கிடைப்பது, சாத்தியமாயிற்று!

இ. அவர்கள், சத்துருவுடன், ஆவிக்குரிய போராட்டத்தில் இருக்கும் போது, "கிறிஸ்துவுக்குள் எப்போதும் வெற்றி சிறக்க, தேவன் அவர்களை வழி நடத்துவார்" *(2கொரிந்தியர் 2:14)*. அவர்கள்,

1. சத்துருவினுடைய போராயுதங்களையும், வஸ்திரங்களையும் உரிந்துபோட்டு, இந்த உலகத்தின் வீதிகளில் வெற்றி ஊர்வலம் செல்வார்கள்.

2. வானமண்டலங்களிலுள்ள பொல்லாத சக்திகளின் மீது வெற்றி சிறந்து, அவைகளை பொதுமக்கள் யாவரும் பார்க்கும்படி செய்வார்கள்.

3. பலவானைக் கட்டி அவனுடைய உடைமைகளை எடுத்துக் கொள்ளுவார்கள்.

4. பாவத்திற்கு மேலாக வாழ்ந்து, இயேசுவைப் போல் நடப்பார்கள்.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்
கொலோசெயர் 2:16-23

முன்னுரை

அ. இன்று நம்முடைய வேதபாடம், கொலோசேபட்டணத்திலுள்ள விசுவாசிகள், கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய சுதந்தரத்தை இழந்து போகாதபடி, பவுல் அவர்களை எச்சரிக்கிறார். பழைய ஏற்பாட்டிலுள்ள சட்ட பிரகாரமானவைகளுக்கும், சடங்காச்சார விதிகளுக்கும், மற்றும் மனிதர்களால் திட்டமிடப்பட்ட சடங்காச்சாரங்களுக்கும் அடிமையாவதினால் இது நேரிடும். இந்த எச்சரிப்பில் கீழ்க்கண்டவைகளும் அடங்கும்

1. சமய பண்டிகைகள் மற்றும் உணவு சம்பந்தப்பட்ட காரியங்கள்

2. மாயமான தாழ்மையும் தூதர்கள் வணக்கமும்

3. மனுஷருடைய கற்பனைகளும் போதனைகளும்

1. கிறிஸ்துவுக்குள் உள்ள சுதந்திரம், உணவு மற்றும் பண்டிகைகள் தொடர்பான சட்டங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது (2:16-17)

அ.வச.16 "ஆகையால், போஜனத்தையும், பானத்தையும்---- குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக". "போஜனத்தையும், பானத்தையும்" என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தில், கூறப்பட்ட சுத்தமான மற்றும் அசுத்தமான உணவுப்பொருட்களைப்பற்றிய விதிகளைக் குறிக்கும். (லேவி11:1-47; உபா14:3-20).

கொலோசே பட்டணத்திலுள்ள கள்ளப் போதகர்கள், கீழ்க்கண்டவற்றை, விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும் என்று உபதேசித்தார்கள்:

1. அவர்கள் புசிப்பதைக்குறித்தும், குடிப்பதைக்குறித்தும், பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட, கடினமான கட்டுப்பாடுகள்.

2. பழைய ஏற்பாட்டுப் பஞ்சாங்கத்தில் வகுக்கப்பட்ட சடங்குகள்

ஆ. கிறிஸ்து கல்வாரியில் முடித்த காரியத்தின் வெளிச்சத்தில் நோக்கும் போது, மோசேயின் நியாயப் பிரமாண ஒழுங்கு முறைச் சடங்குகளைக் கடைப்பிடிப்பது அல்லது கடைபிடிக்காமல் புறக்கணிப்பது, அடிப்படையில் தேவனுக்கு முன்பாக, விசுவாசிகளை ஒருவரும் நியாயந்தீர்க்க முடியாது. (கொலோசெ2:13-14). கிறிஸ்து உணவுப் பொருட்கள் அனைத்தும் "சுத்தமானது" என்று அறிவித்திருக்கிறார். (மாற்7:19) அவ்வாறே அப்போஸ்தலனாகிய பவுலும் கூறியிருக்கிறார். (ரோம14:14)

இ. வச. 16"--- பண்டிகை நாளையும் மாதப் பிறப்பையும் ஓய்வு நாட்களையும் குறித்தாவது ---" யூதருடைய பஞ்சாங்கத்தில் ஓய்வுநாள் என்று குறிப்பிட்டு, கூறப்பட்ட பல்வேறு பரிசுத்த நாட்களை இவைகள் குறிக்கும் (யூதர்கள் மட்டும் ஓய்வுநாளை ஆசரித்தனர்)

1. சமய பண்டிகைகள் - வருடாந்தரம்.

2. பௌர்ணமி - மாதந்தோறும்

3. ஓய்வு நாள் - வாரந்தோறும்

ஈ. இந்தச் சட்டப்பிரகாரமான சடங்காச்சாரவிதிகளுக்கு ஒரு கிறிஸ்தவன் விடுதலையாயிருக்கிறான் என்று பவுல் போதித்தார். (கலா4:4-11,5:1) அவ்வாறே கிறிஸ்துவும் போதித்தார்.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் கொலோசெயர் 2:16-23

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள்" (மத்11:28) என்பது பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாண விதிகளால், வருத்தப்பட்டு, பாரம் சுமப்பதைக் குறிக்கும், ஆகவே, பிதாவாகிய தேவனுக்கும், ஒரு மனிதனுக்கும் உள்ள தொடர்பை சோதித்துத் தீர்மானித்து முடிவுக்கு வர ஒருவரும் இவைகளைப் பயன்படுத்தக் கூடாது.

உ. ஒரு மனிதன் பிதாவாகிய தேவனுடன் ஐக்கியப் பட்டிருப்பதை தெரிந்துகொள்ள மூன்று பரீட்சைகள் இருப்பதாக யோவான் சொல்லுகிறார்.

1. சன்மார்க்கம் - இயேசு வாழ்ந்த சன்மார்க்க வாழ்க்கை வாழுவது. இயேசு நம்மில் அன்பு கூர்ந்தது போல் தியாக மனப்பான்மையுடன் மற்றவர்களிடம் அன்பு கூருவது.

2. உலகம் - உலகத்தையும், அதிலுள்ள ஒன்றையும் நேசிக்கக்கூடாது

3. மதக்கொள்கை - இயேசுவே, கிறிஸ்துவாகிய அபிஷேகிக்கப்பட்ட, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்ற சத்தியத்தைப் பற்றிப் பிடித்துக்கொள். (1யோவா2:3-27). பவுல் நான்காவதாக ஒன்றைச் சேர்த்துக் கொண்டார்: இயேசு உன்னுடைய கர்த்தர் என்பதை வெளிப்படையாக, பொதுவாக அறிக்கையிடு. (1கொரி12:3)

ஊ.வசனம் 17 "அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது" பழைய ஏற்பாட்டின் சட்டப்பூர்வமான சடங்காச்சார விதிகள் வரப்போகும் காரியங்களின் நிழற்பாடங்களாகக் காட்டப்பட்டது. (எபிரெயர்10:1-10) அவைகள் தீர்க்கதரிசன வசனங்களும், கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியிருந்தவைகளுமாய் இருந்தன. (மத்தேயு5:17; ரோமர்3:31)

எ. வசனம்17 "அவைகளின் பொருள் (சரீரத்தில்) கிறிஸ்துவைப்பற்றினது" ஆகவே ஒருவன் கிறிஸ்துவைக் கண்டடையும் போது (சபையாகிய அவருடைய சரீரத்தின் ஒரு அங்கமாகும்போது) நிழலைப் பின்பற்றுவதை நிறுத்திவிட வேண்டும். பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தையும் சடங்காச்சாரங்களையும் கைக்கொள்ள மறுபடியும் முயற்சி செய்வது, அம்மனிதன் கிருபையிலிருந்து விழுந்து, கிறிஸ்துவுக்கு அந்நியனாகக் காரணமாயிருக்கும். (கலாத்தியர்15:4)

2. கிறிஸ்துவிலுள்ள சுதந்திரம் மாயமான தாழ்மையிலிருந்தும், தூதர் ஆராதனையிலிருந்தும் நம்மை விடுவிக்கிறது. (2:18-19)

அ. வசனம் 18 "மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று --- உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்" மாயமான தாழ்மையிலும் தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுள்ளவர்கள், உங்களிடம் கீழ்க்கண்டவற்றைச் செய்யாதபடி பார்த்துக் கொள்ளுங்கள் என்று பொருள்படும்.

1. உங்களுடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நியாயந்தீர்ப்பது.

2. கிறிஸ்து உங்களுக்கு வாக்குத்தத்தம் செய்த நித்திய ஜீவனாகிய பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று கூறுவது.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் கொலோசெயர் 2:16-23

ஆ. “மாயமான தாழ்மை” என்பது தாழ்மையுள்ளவர்கள் என்று உரிமையோடு கூறிக்கொண்டு ஆனால் உண்மையில் மனமேட்டிமையுள்ளவர்களாயிருப்பவர்களைக் குறிக்கும். அவர்கள்:

1. ஆவிக்குரிய வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைந்து விட்டதாக உரிமைப் பாராட்டுவார்கள்.

2. உயர்ந்த நிலையிலுள்ள கிறிஸ்தவ வட்டாரத்தில் உள்வட்டத்தில் தாங்கள் ஒருபாகம் என்று உரிமையோடு கூறுவார்கள்.

3. வேறு ஒருவருக்கும் தெரியாத பயபக்திக்குரிய பரம இரகசியங்களுக்கு பதில் அளிக்க அறிந்திருப்பார்கள்.

4. சுய வெறுப்பு வாழ்க்கையை படம் போல் வெளிப்படையாகக் காட்டுவார்கள்.

இ. “தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனை” இது ஆவிகளுக்குச் செய்யும் ஆராதனை. இவர்கள் வானமண்டலங்களிலுள்ள அதிபதிகளாகிய, பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்திருக்கும் ஆவிகள் என்று நினைத்து, பிசாசுகளை உண்மையில் வணங்கினார்கள். “வல்லமைகள் மற்றும் அதிகாரங்களையுடையவர்களின் போராயுதங்களை (தேவன்) உரிந்து போட்டார். சிலுவையின் மூலமாக அவர்கள்மேல் வெற்றி சிறந்து, அவர்களை பொதுவாக யாவரும் பார்க்கும்படி செய்தார்”. (கொலோசெயர்2:15) என்று பவுல் கூறும்போது பவுல் பெரும்பாலும் இதைத்தான் குறித்துப் பேசினார்.

ஈ. மிக உன்னத தேவனை ஆராதிப்பதற்குப் பதிலாக தாழ்வான தூதர்களை ஆராதிப்பது அவர்களுடைய தாழ்மையை நிரூபிக்கிறது, என்றுகூட தூதர்களை ஆராதிப்பவர்கள் விவாதித்திருக்கக் கூடும். தேவனுக்கும், அவர்களுக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்க, தூதர்களை ஆராதித்தனர் என்று சிலர் நினைத்தார்கள். வெளிப்படுத்தின விசேஷங்களை அவனுக்குக் கொடுத்த தூதனை யோவான் வணங்க முற்பட்டபோது, அத்தூதன் அவனை நோக்கி, “இப்படிச் செய்யாதபடிக்குப்பார், ---- நானும் ஒரு ஊழியக்காரன் -- தேவனைத் தொழுதுகொள்.” என்று கூறினான். (வெளிப்படுத்தின விசேஷம் 19:10)

உ. வசனம்18 “காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து ---” இப்படிப்பட்டவர்கள், சிறிது சிறிதாக முயன்று, எப்படியாவது சபைக்குள் நுழைந்து விடுவதை ஒரு போதும் நிறுத்த மாட்டார்கள். இவர்கள் தங்களுடைய ஆழ்ந்த ஞானத்தில் தோன்றின, நம்பக் கூடாத ஆவிக்குரிய காரியங்களையும், தரிசனங்களையும், அவர்களுடைய சுயவெறுப்பையும் குறித்துப் பேசி, சிறியவற்றிற்கும் பெரிய விளக்கம் கொடுப்பார்கள். அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் விசேஷமாக, மற்றவர்களிடம் இருதயத்தில் கனிவோடு பழகுகிற விசுவாசிகளுக்கு, அவர்கள் (தூதர்களுக்கு ஆராதனை செய்பவர்கள்) போதிக்கவும், அவர்களுக்குள் தங்களுடைய கருத்துக்களை ஏமாற்றித் திணிக்கவும் முயற்சி செய்வார்கள்.

ஊ. அவர்கள் சொல்லுகிற காரியங்களை வேதத்திலிருந்து நிரூபிக்கவும் அவர்களால் ஒரு போதும் முடியாது. இதற்குப் பதிலாக, அவர்களுடைய தரிசனங்களையும், விசேஷமான உள்காட்சிகளையும், தங்களுடைய விவாதத்திற்கு அடிப்படையாக பயன்படுத்துவார்கள்.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்
கொலோசெயர் 2:16-23

வேதவாக்கியங்களைச் சான்றாக அவர்கள் எடுத்தாலும், அதை அந்த சந்தர்ப்பத்திற்கு அப்பால், அதற்குக் கொடுக்கப்படாத நோக்கங்களையுடைய பொருளையும், பயனையும் விளக்கமாகக் கொடுப்பார்கள்.

எ. வசனம் 18-19 "தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் ---" இந்த மனிதன் உண்மையில் ஆவிக்குரியவன் அல்ல, அவன் மாம்சத்தாலும் உலகத்தாலும் நிறைந்தவன். ஆகவே அவன் ஆவிக்குரிய ஞானமும் உள்நோக்கும் இல்லாதவன். அவன், மனதில் உருவான அல்லது, பிசாசுகளினால் அவனது மனதில் வைக்கப்பட்ட அர்த்தமற்ற எண்ணங்களினால் நிறைந்தவன். (வீணாய் இறுமாப்புள்ளவன்)

ஏ. வசனம் 18 "தலையைப் பற்றிக் கொள்ளாமல்" ஆவிக்குரிய எல்லா வெளிச்சத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊற்றும் காரணமுமாயிருப்பவரும், சபைக்குத் தலையாக இருப்பவருமாகிய கிறிஸ்துவிடமிருந்து, எல்லா தொடர்பையும் அவன் இழந்து விட்டான்.

ஒ. இந்தக் கள்ளப்போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளுடைய, விவாதங்களையும், நியாயங்களையும் விசுவாசிகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அவர்கள் சொல்லுவதைக் கேட்கவும் கூடாது. மாயமான தாழ்மையும், தூதர்கள் ஆராதனையும் ஒரு உண்மையான விசுவாசியின் வாழ்க்கையில் ஒரு பாகமாக இருக்கக் கூடாது. இந்தக் காலத்திலும், நாட்களிலும் கள்ளப் போதகர்களாலும், தீர்க்கத்தரிசிகளாலும் வழிதவறி செல்ல, நடத்தப்படுவது இலகுவாக உள்ளது.

அநேகர் அவ்வாறு சென்றுவிட்டார்கள், இன்னும் அநேகர் அவ்வாறு செல்லுவார்கள். ஆகவே ஜாக்கிரதையாயிரு!

3. கிறிஸ்துவுக்குள் உள்ள சுதந்திரம், மனிதர்களுடைய கட்டளைகள் மற்றும் போதனைகளிலிருந்து நம்மை விடுவிக்கிறது. (2:20-23)

அ. வசனம் 20-21 "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால் --- கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?" "கிறிஸ்துவுடனே கூட உலக வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால்," என்றால் நம்முடைய மனந்திரும்புதலுக்குப் பின், தொகுக்கப்பட்ட துறவற (சுயவெறுப்பு) சட்டங்களுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டு, இனி ஒருபோதும் நாம் வாழவேண்டிய அவசியமில்லை என்று. இந்த சொற்றொடர் பொருள்படும். அவைகள் இனி நம்மேல் அதிகாரம் செலுத்த முடியாது. முடிவாக, நாம் அவைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டு விட்டோம்!

ஆ கிறிஸ்தவ பக்திக்கு விரோதமாக கொலோசே பட்டணத்தார், கைக்கொள்ள வேண்டுமென்று கூறிய, கீழ்க்கண்ட காரியங்களை எதிர்த்து பவுல் விவாதித்தார்:

1. கடவுளை மனித அறிவுக்கு எட்டாத, மறைபொருளாக வைத்து தியானிக்கும் சமயபக்தி.

2. சரீரபிரகாரமான வெளிப்படையாகச் செய்யப்படும் விருத்தசேதனம் மற்றும் உணவு சம்பந்தமான கட்டுப்பாடுகள்.

3. மதசம்பந்தமான பண்டிகைகள், மற்றும் விசேஷ நாட்களை ஆசரித்தல்.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் கொலோசெயர் 2:16-23

இ. வசனம் 21. "----- தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே -----" கொலோசே பட்டணத்திலுள்ள கள்ளப்போதகர்கள், வெளிப்படையாக "செய்ய வேண்டாம்" என்ற காரியங்களின் மொத்த கருத்துக்களின் அட்டவணை ஒன்றை நிர்மாணித்து, அவற்றை விசுவாசிகள் கைக்கொள்ள வேண்டுமென்று நிர்பந்தித்தார்கள். பவுல் அவற்றைச் சுருக்கமாக, "தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே", என்று எழுதுகிறார். சபை கவனமாக இராவிட்டால், எந்த சபைக்குள்ளும் இந்த வழக்கம் மெதுவாக ஊர்ந்து புகுந்துவிடும். விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு, என்பதை, சட்ட ஒழுங்குமுறை, அறியாமலே இடம்மாற்றிக் கொள்ளும், அல்லது அத்துடன் இணைத்துக் கொள்ளும்

ஈ. வசனம் 22. "இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒழுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும் -----" நாம், நம்மை நீதிமான்களாக்கிக் கொள்ள, இவைகளில் நாம் கைக்கொள்ள வேண்டியவைகளை செய்யவும், செய்ய வேண்டாம் என்று குறிக்கப்பட்டவைகளைத் தள்ளிவிடவும் கூடியவைகளாக இருப்பதால், இவை நமக்குக் கவர்ச்சியாகத் தோன்றுகிறது. நம்முடைய இரட்சிப்பை, நாம் சம்பாதிக்கக் கூடுமானால், நாம் அதிகக் கட்டுப்பாட்டிற்குள் இருப்போம். அநேக சமய ஒழுங்கு முறைகள், கிரியைகளை பே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆகிலும், தேவனுக்கு முன்பாக நம்முடைய நீதி, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தில் மட்டுமே உள்ளது. அது கிரியைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. (ரோமர்3:21-22; எபேசியர்2:8-9)

உ. வசனம் 23. "இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய, மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது." "பிரயோஜனப்படாது," என்றால் பயனற்றது, என்று பொருள்படும். வெளிப்படையான சமய சடங்காச்சாரங்கள், சமய பண்டிகைகள் மற்றும் விசேஷ நாட்களை ஆசரிப்பது, துறவறம் (சுயவெறுப்பு) மற்றும் கிரியைகளினால் இரட்சிப்பு ஆகிய இவைகள்யாவும், மாம்சத்தைக் கட்டுப்படுத்துவதாகக் காணப்படும்போது பயனற்றதாக இருக்கும். கீழ்க்கண்டவைகள் மட்டுமே மாம்ச சம்பந்தமான சிற்றின்பங்களைக் கட்டுப்படுத்தும்:

1. கல்வாரியில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தம்.

2. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை. (ரோமர்8:1-4) ரோமருக்கு எழுதின 7 ஆவது அதிகாரத்தில் பவுல் இதைக் குறித்து மேலும் அதிகமாகச் சொல்லுகிறார். (ரோமர் 7:14-25)

ஊ. பாவம் செய்வதை நிறுத்த ஒருவர் விரும்பினால், அவன் சிலுவைபண்டைக்குச் செல்ல வேண்டும்! கிரியைகள், தனிப்பட்ட சாதனைகள், உணவு சம்பந்தமான விதிகளைக் கடைப்பிடித்தல் மற்றும் விசேஷ நாட்களை ஆசரித்தல் ஆகிய இவை யாவற்றையும் தவிர்த்து, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே ஒருவன் இரட்சிக்கப்படுவான்.

முடிவுரை

அ. ஆகவே கிறிஸ்துவுக்குள் நம்முடைய சுதந்திரம், நம்மைக் கீழ்க்கண்டவற்றிலிருந்து விடுதலை செய்கிறது.

1. உணவு மற்றும் பண்டிகைகள் தொடர்பான விதிகள்.

கிறிஸ்துவுக்குள் சுதந்திரம்
கொலோசெயர் 2:16-23

2. மாயமான தாழ்மை மற்றும் தூதர்களுக்குச் செய்யும் ஆராதனை.

3. மனுஷர்களுடைய கற்பனைகளும் போதனைகளும்

ஆ. கீழ்க்கண்ட காரியங்களைக் கைக்கொள்ளுவதினால் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக்கப்படுவோம் என்று நம்பினால், கிறிஸ்துவுக்குள் நம்முடைய சுதந்தரத்தை மறுபடியும் இழந்து விடுவோம்:

1. பழைய ஏற்பாட்டிலுள்ள உணவு சம்பந்தமான விதிகளைப் பின்பற்றல்.

2. விசேஷ மத சம்பந்தமான நாட்களை ஆசரித்தல்.

3. அறிவுக்கெட்டாத இரகசிய ஆவிகளின் தொடர்பு மற்றும் வேதத்திற்கப்பாற்பட்ட, ஆழ்ந்த ஆவிக்குரிய ஞானம், பெற்றுக் கொள்வது.

4. தூதர்களின் ஆராதனை.

5. கிரியைகள் அல்லது சொந்த சாதனைகள்.

இ. சுயவெறுப்பு, சமய சம்பந்தமான சடங்காச்சாரங்கள் மற்றும் சடங்குகள் ஆகிய இவைகள் மிகுந்த ஆவிக்குரிய ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகிறது. ஆகிலும், கிறிஸ்துவுடன் உண்மையான பயபக்திக்குரிய அனுபவத்திற்குள் வருவதை நிரூபிக்கும், ஒரு மனிதனின் இருதயம் மாற்றப்படுவது அல்லது மறுபடியும் பிறப்பது என்ற காரியங்களுக்கு வரும்போது, அவைகள் பயனற்றவைகளாக இருக்கும்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் கொலோசெயர் 3:1-17

முன்னுரை

அ. கொலோசேயர் சபைக்கு பவுல் எழுதின நிருபத்தில் இது, தனிப்படுத்தப்பட்ட பாகமாக ஒரு சமயம் கருதப்படலாம். முதலாம், இரண்டாம் அதிகாரங்களில் கொள்கை சம்பந்தப்பட்ட காரியங்களை விவாதிக்கிறார். மூன்றாவது மற்றும் நான்காவது அதிகாரங்களில், நடைமுறை வாழ்க்கை சம்பந்தப்பட்ட காரியங்களை முதன்மைக் கருத்தாகக் கொண்டு விவாரிக்கிறார். (ரோமர்12:1; எபேசியர்4:1; பிலிப்பியர்4:1 வசனங்களையும் பார்க்கவும்). விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பு, கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கை வாழுவதிலிருந்து பிரிக்கப்பட முடியாது.

ஆ. ஒருநாள் கிறிஸ்து வருவார், மகிமையில் அவரோடு கூட நாம் இருப்போம். ஆனால், இடைப்பட்ட நாட்களில், பூமியில் நம்முடைய அழிவுக்குரிய சரீரங்களோடு நாம் தொடர்ந்து ஜீவிக்கிறோம். ஆகிலும், கிறிஸ்துவுக்குள் நம்முடைய புதிய வாழ்க்கை, அவரை நாம் அறிவதற்கு முன் வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்க வேண்டும் (2:12; ரோமர்6:4) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாக, நாம்

1. நம்முடைய இருதயம் மேலானவைகளில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. பூமிக்கடுத்த இயற்கை சுபாவத்தை மரணத்திற்குட்படுத்த வேண்டும்.

3. தாழ்மையினால் நம்மை உடுத்துவித்துக் கொள்ள வேண்டும்.

4. சமாதானமும் கிறிஸ்துவினுடைய வாழ்க்கையும் நம்முடைய இருதயங்களில் வாசம் பண்ணி, ஆளுகை செய்ய வேண்டும்.

1. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள், அவர்கள் இருதயங்களையும் உள்ளங்களையும் மேலான காரியங்களில் வைக்கிறார்கள். (3:1-4)

அ. வசனம் 1. "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், --- மேலானவைகளைத் தேடுங்கள்." "கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால்", என்றால், நாம் எழுப்பப்பட்டிருக்கிறோம், உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறோம் அல்லது ஆவியில் மரித்த நிலையிலிருந்து, ஆவியில் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறோம். எனவே இப்பொழுது, நம்முடைய இரட்சகர் கிறிஸ்துவின் சாயலை உடையவர்களாக இருக்கிறோம்.

நாம் ஆவிக்குள் புதிய சிருஷ்டிகளாக இருக்கிறோம். (2கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 16:15) நம்முடைய ஆவி, பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும் ஜநிப்பிக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 3:3-8). இப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார். (ரோமர்8:9)

ஆ. இக்காரணத்தினால், மேலான காரியங்களில் நம்முடைய இருதயங்களை வைக்க வேண்டும், நம்மால் அது கூடும். (இடைவிடாமல் அதைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும், எங்கு சென்றாலும், தேடிச் செல்ல வேண்டும்). "மேலானவைகளைத் தேடுங்கள்" என்றால், நம்முடைய ஆர்வங்கள், மனப்பான்மைகள், வாஞ்சைகள், நோக்கங்கள், இலக்குகள் மற்றும் நடத்தைப் பண்புகள், ஆகிய இவைகள் யாவும், கிறிஸ்துவினுடையவைகளோடு, ஒரே நேர்வரிசையில் இருக்கும்படியாக இடைவிடாமல் முயற்சி செய்வதைக் குறிக்கும்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் கொலோசெயர் 3:1-17

இ. வசனம் 1. "...கிறிஸ்து, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள...." "மேலானவைகள்" என்ற சொல்லும் "கிறிஸ்து வீற்றிருக்கும் இடம்" என்ற சொற்றொடரும் இங்கு ஒரே அர்த்தத்தையுடையவைகள், இவைகள், "தேவனுடைய "வலது பாரிசத்தைக்" குறிக்கின்றன. ஆதி அப்போஸ்தலர்களின் பிரசங்கங்களிலும், போதனைகளிலும், "தேவனுடைய வலது பாரிசத்திற்கு" கிறிஸ்து எழுந்தருளிப்போன காரியம் ஒரு மிகமுக்கியமானதும், இடைவிடாமல் கூறப்பட்ட கருத்தாக இருந்தது. (அப்போஸ்தலர் 2:33-35, 5:31; 7:55-56; எபிரெயர் 1:3; 1பேதுரு 3:22; வெளிப்படுத்தின விசேஷம் 3:21; இவற்றுடன் மாற்கு 12:35-37, 14:61-62; சங்கீதம் 110:1; தானியேல் 7:13-14 வசனங்களையும் பார்க்கவும்)

ஈ. இது, மிக உன்னத தெய்வீக சலுகை பெற்ற இடம். இது, தேவனுடைய மிக உயர்ந்த வல்லமையையும் அதிகாரத்தையும் குறிக்கிறது.

இந்த பிரபஞ்சத்திலுள்ள எதிர்த்துப் போராடும் சக்திகள் யாவற்றையும்; தமக்குக் கீழ் கொண்டுவரும் வரையிலும், இங்கிருந்துதான் கிறிஸ்து தொடர்ந்து அரசாளுவார். (1கொரிந்தியர்15:24-28, வசனங்களுடன் பிலிப்பியர் 2:10-11; எபேசியர் 4:10 வசனங்களையும் பார்க்கவும்)

உ. வசனம் 2: "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்". "நாடுங்கள்" என்றால் மனதை பயிற்சி செய்யுங்கள், மனோபாவம் அல்லது கருத்தை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வது, மேலான காரியங்களில் கருத்துடையவர்களாக அல்லது ஆர்வமுடையவர்களாக இருத்தல் என்று பொருள்படும்.

முதலில், இது இருதயத்தில் இருந்தது. இப்பொழுது அது மனதில் இருக்கிறது. கிறிஸ்து, எவைகளில் கருத்துள்ளவராகவும், ஆர்வமுடையவராகவும் இருக்கிறாரோ, அவைகளில் ஒரு விசுவாசியும் கருத்துள்ளவனாகவும் ஆர்வமுடையவனாகவும், தன் முழு உள்ளான ஜீவியத்திலும், வாழ்க்கையிலும் இருக்க வேண்டும் என்று சந்தேகமின்றி, இவைகள் குறிப்பிடுகின்றன. கிறிஸ்துவுக்கு அப்பால் உள்ள உலகத்தின் மக்களுக்கு அவர்களுடைய நோக்கங்கள், வாஞ்சைகள், கவலைகள், மற்றும் ஆர்வங்கள் ஆகிய இவைகள் யாவும் "பூமிக்கடுத்த காரியங்களாக" இருக்கிறது.

ஊ. வசனம் 3. "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது". நாம் மரித்தது, கிறிஸ்துவுக்கு வெளியே, நம்முடைய பழைய வாழ்க்கை முறைகளுக்கு மரித்ததைக் குறிக்கிறது. ரோமர் 6:2-11; 2:20) பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2கொரிந்தியர் 5:17) "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது", என்றால், நம்முடைய ஜீவன், கிறிஸ்துவின் ஜீவனோடு பத்திரமாக இணைக்கப்பட்டுள்ளது. அவனுடைய ஜீவன் (கிறிஸ்துவின்) "தேவனுக்குள்" இருக்கிறது என்று பொருள்படும். இது, நாம் கிறிஸ்துவின் ஜீவனின் தொடர்ச்சியாகிவிட்டதுபோல் காணப்படுகிறது. கிறிஸ்து தேவனுக்குள் இருப்பதினால், கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட நாமும், "தேவனுக்குள்" இருக்கிறோம்.

எ. வசனம் 4. "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்". பிதாவாகிய தேவன் மற்றும் கிறிஸ்துவின் ஜீவனின் தொடர்ச்சியாக நம்முடைய ஜீவன் பத்திரமாக இணைக்கப்பட்டிருக்கிறது என்பது, இந்த நடைமுறைக் காலத்தில், மறைக்கப்பட்ட ஆவிக்குரிய உண்மையாக இருக்கிறது.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்
கொலோசெயர் 3:1-17

ஆகிலும், வருங்காலத்தில் சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படும்போதும், கிறிஸ்துவுக்குள் மரித்தோர் உயிர்ப்பிக்கப்படும் போதும், இது வெளிப்படையாகத் தெரியப்படுத்தப்படும்.

ஏ. "அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்", என்றால், அவர் மகிமையோடு இருப்பதுபோல் நாமும் மகிமையாகக் காணப்பட்டு, பூமியில் அவருடைய மகிமையான அரசாட்சியில் பங்குபெறுவோம். (ரோமர் 8:17) நாம், அவருடைய வருகையில் நம்முடைய மகிமையான சரீரத்தைப் பெற்றுக் கொள்ளுவோம். அவருடைய மகிமையான சரீரத்திற்கு ஒத்த சரீரங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். (1தெசலோனிக்கேயர் 4:13-17; ரோமர் 8:29-30; பிலிப்பியர் 3:20-21; 1யோவான் 3:2)

2. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள், உலகத்திற்கடுத்த சுபாவத்தை அழித்து மரித்துப்போகச் செய்கிறார்கள். (3:5-11)

அ. வசனம் 5. "... இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற... அழித்துப்போடுங்கள்". "அழித்துப்போடுங்கள்", என்றால், மரித்துப்போகும்படி செய்வது, கீழ்ப்படுத்துவது, உலகச் சுபாவத்திற்கு சம்பந்தப்பட்டவைகள் எதுவாக இருந்தாலும் அதை ஒழித்து விடுவது, என்று இங்கு பொருள்படும். இதைத், தீர்மானத்தோடும், தீவிரமாகவும், மிக அவசரமான காரியமாகவும் உணர்ந்து செய்யவேண்டும். இப்பொழுது இதை, நாம் செய்யமுடியும் ஏனெனில், புதிய பிறப்பில், இந்த பாவ சுபாவம் பரிசுத்த ஆவியானவரால் உடைக்கப்பட்டு, வல்லமையற்றதாக மாறிவிட்டது. (ரோமர் 8:2-4, 14; யோவேல் 3:3-8) உரிமையுடன் நம்மேல் அதனுடைய சக்தியை திரும்ப செலுத்த, இனிமேல் அதனால் முடியாது. ஆகவே நாம் பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்திருக்கிறோம். (2:20 3:3; ரோமர் 6:2,11, ரோமர் 8:13)

ஆ. ஆகிலும், பாவ சுபாவம் போய்விட்டது, என்று இது பொருள்படாது. அதற்கு மாறாக அது ஜீவிக்கிறது. அது விசுவாசியினால் இடைவிடாமல் கவனிக்கப்படவேண்டும். விசுவாசி, அழிவுள்ள சரீரத்துடன் இன்னும் இந்த உலகத்தில் இருக்கிறான். மற்றும் பாவ சோதனைகளுக்கு இலக்காக இருக்கிறான் (யாக்கோபு 4:5). உலக சுபாவம் (பாவமுள்ள தன்மை) சம்பந்தப்பட்ட, நாம் இடைவிடாமல் அடக்கி, அதனுடைய சக்தியை இழக்கவைக்கவேண்டிய காரியங்களைக் குறித்த அட்டவணையை பவுல், தொடர்ந்து நமக்குக் கொடுக்கிறார்:

1. பாலின துன்மார்க்கம் - இது, ஒரு வேசி அல்லது விபச்சாரியோடு பாலின தொடர்புகொள்வதைக் குறிக்கும். இது பொதுவாக, ஒழுங்கீனமான பாலின சம்பந்தப்பட்டவைகளையும் குறிக்கும் (1 கொரிந்தியர் 6:18; 1 தெசலோனிக்கேயர் 4:3)

2. அசுத்தம் - இது ஆண், பெண்களிடம் காணப்படும் தவறான நடத்தை. ஆனால் மற்றவிதமாக ஒழுக்கக்கேடுகளையும் உள்ளடக்கும் - அசுத்தமான எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகள்.

3. இச்சை - அவமதிக்கத்தக்க, பொல்லாத உணர்ச்சிகள்.

4. துர்இச்சை - "பலமாக நிர்ப்பந்திக்கும்" பொல்லாத ஆசைகள்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் கொலோசெயர் 3:1-17

5. பேராசை - மற்றவர்களுடைய உரிமைகளை முற்றிலும் கவனத்தில் வைக்காமல், தங்களுக்கு இருப்பதைக் காட்டிலும் மேலும் அதிகமாக பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற வாஞ்சை. பேராசைக்கு, விக்கிரக ஆராதனைக்குச் சமமான இடம் இங்கு தரப்படுகிறது. ஏனெனில் அவருடைய மக்களுடைய இருதயத்தில், தேவன் இருக்கவேண்டிய இடத்தில், ஒரு பொருளின் மீதுள்ள வாஞ்சை வைக்கப்படுகிறது. (எபேசியர் 5:5) இந்த வசனங்களையும், சேர்த்துக் கொள்ளவும் மாற்கு 7:21-23, ரோமர் 1:29-31; 1 கொரிந்தியர் 6:9-10, கலாத்தியர் 5:19-21; எபேசியர் 5:5; வெளிப்படுத்தின விசேஷம் 22:15) இந்த வசனங்கள் பாவசுபாவத்தோடு சம்பந்தப்பட்ட துன்மார்க்கத்தின் அட்டவணைகளைக் கொண்டுள்ளது.

இ. வசனம் 6 "இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்". பாவத்திலும் கீழ்ப்படியாமையிலும் தொடர்ந்து இருப்பவர்கள் மீது நியாயத்தீர்ப்பும், தேவகோபாக்கினையும், நிச்சயமாக வரும்! தேவகோபாக்கினை கீழ்க்கண்டவைகளைக் குறிக்கும்:

1. ஏழுவருட மகா உபத்திரவகாலம்

2. ஆவிக்குரிய மரணம்; நித்திய கால முழுவதும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஆவியும் சரீரமும் நரக அக்கினியில் போடப்படுவது (வெளிப்படுத்தின விசேஷம் 6-16 அதிகாரங்கள்; மத்தேயு 10:28; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15) "இவைகளின் பொருட்டு" என்பது, வசனம் 5 வரிசைப்படுத்தப்பட்ட பாவங்களைக் குறிக்கும்.

ஈ. வசனம் 7 "நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டு வந்தீர்கள்" "செய்து கொண்டு வந்தீர்கள்" என்றால் வாழ்ந்து கொண்டிருந்தீர்கள், என்று பொருள்படும். "மனந்திரும்புகிறதற்கும், பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பதற்கு முன், கொலோசே பட்டணத்தார், அவர்களுடைய பாவ (உலக) சுபாவத்தால் பலமாக ஆதிக்கம் செலுத்தப்பட்டு துன்மார்க்கமாக பாவவாழ்க்கை வாழ்ந்தார்கள். (ரோமர் 7:15-23) இப்படிப்பட்ட வாழ்க்கையை, விசுவாசித்தபின், சிந்தனைகளிலும், கிரியைகளிலும் முற்றிலும் விட்டுவிடவேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

உ. வசனம் 8-9 "... இவைகளையெல்லாம்......... களைந்துபோட்டு...." "களைந்துபோட்டு என்றால், எடுத்துவிடுவது அல்லது தள்ளிப்போடு, விலக்கிவிடு என்று பொருள்படும். இது, அசுத்தமான உடையை அவிழ்த்து, இனி ஒருபோதும் அதை, மறுபடியும் அணிந்து கொள்ளவேண்டாமென்று, தூக்கி அப்பாலே எறிந்துவிடுவதற்கு ஒப்பானது. வசனம் 5 அசுத்தம் மற்றும் பொருளாசை ஆகியவற்றைப் பற்றியது, அடுத்த புதிய அட்டவணை மனப்பான்மை மற்றும் பேச்சு சம்பந்தமானது:

1. கோபம் - ஒரு மனிதனை அவனுடைய அயலானைக் காயப்படுத்துவதற்குக் காரணமான மிகப்பொல்லாத மனோபாவனை (மனநிலை)

2. மூர்க்கம் - மற்றொருவருக்கு விரோதமாக, உணர்ச்சி மேலிட்டு எரிந்துவிழுவது.

3. பொறாமை - மற்றவர்களுக்கு துன்பம் இழைக்கும் அல்லது தீமைசெய்ய விரும்பும் மனப்பான்மை.

4. வம்பு வார்த்தைகள் பேசுவது - அவதூறாக, இழிவாக மற்றொருவருடைய பேருக்கு பங்கம் வரும்படி பேசுவது.

5. தூஷணம் - அவதூறாக, கேவலமாக, அசுத்த வார்த்தைகளைக் கூறி திட்டுவது.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்
கொலோசெயர் 3:1-17

6. பொய் - நேர்மையில்லாமல் பேசுவது, உண்மைக்குப் புறம்பான காரியங்களைக் கூறுவது.

ஊ. வசனம் 9-10 "...பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு... புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே". அழுக்கான ஆடைகளைக் களைந்துபோட்டு அதற்குப் பதிலாகச் சுத்தமானவைகளை அணிந்து கொள்ளுவதாக மனோபாவனை செய்யப்பட்டுள்ளது. இது கடந்த காலத்தில் உள்ளது எனவே, மறுபடியும் பிறந்தபோது ஏற்கனவே நடைபெற்ற காரியத்தைக் குறிக்கிறது. கொலோசே பட்டணத்திலுள்ள விசுவாசிகள், அவர்களுடைய பழைய நடைமுறை வாழ்க்கையை விட்டு, இப்பொழுது கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கை (புதியவைகளை அணிந்து கொண்டார்கள்) வாழுகிறார்கள் (கலாத்தியர் 3:27).

எ. வசனம் 10. "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாக பூரண அறிவடையும்படி....." தரித்துக்கொண்ட அந்த "புதிய மனுஷன்" புதுப்பிக்கப்படும் முறையில் தொடர்ந்து செயல்படுகிறான்:

1. அறிவில் - கிறிஸ்துவுக்குள் தேவன், உலகத்தை தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார், என்பதை அறியும் அறிவு (கொலோசெயர் 1:15-23). கள்ளப்போதகர்களின் திரித்துக் கூறும் குறையுள்ள போதகத்தை ஒப்பிடவும் (2:8, 16-23)

2. சிருஷ்டித்தவருடைய சாயலுக்கு ஒப்பான - கிறிஸ்துவினுடைய சாயலைப் பிரதிபலிக்கும்படியாக, பரிசுத்த ஆவியானவர் மூலமாக, புதிய மனுஷன் மேலும், மேலும் மறுரூபமடைந்து வருகிறான்.

(2 கொரிந்தியர் 3:18, 4:16; ரோமர் 12:2; இந்த வசனங்களுடன் ஆதியாகமம் 1:27 பார்க்கவும்).

ஏ. வசனம் 11 "அதிலே கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை... கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்". கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்குள் ஜாதி, மத, கலாச்சார அல்லது சமுதாய தடைகள் எதுவும் இனி ஒருபோதும் இருக்காது. விசுவாசிகள் புதிதாகப் பிறக்கும்போது, கிறிஸ்துவை அணிந்து கொள்கையில் இவைகளும் தள்ளிவைக்கப்படுகின்றன (கலாத்தியர் 3:28). பரிசுத்த ஆவியானவர் மூலமாக, அவர்களுக்குள், அவர் வாசம் பண்ணுகிறதினால், எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படுகிறார்கள் (யோவான் 14:17-20; 17:22-23; ரோமர் 8:9; 1கொரிந்தியர் 6:19; 12:13).

3. தேவனுடைய மக்கள் கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்ளுகிறார்கள் (3:12-14).

அ. வசனம் 12 "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தரித்துக்கொண்டு..." இங்கு மறுபடியும், பழையவைகளைக் களைந்து வேண்டாம் என்று எறிந்துவிட்டு, சுத்தமான ஆடைகளை அணிந்து கொள்ளும் ஒரு மனிதனை மனோபாவனையாகக் கண்டு கூறப்பட்டுள்ளது. 5-11 வசனங்களில், ஒரு விசுவாசி, "அழித்துப்போடுவது" "விட்டுவிடுவது" "களைந்துபோடுவது" ஆகிய பழைய வாழ்க்கையின் நடைமுறைக் காரியங்களைக் குறித்துக் கூறுவதில் அப்போஸ்தலன் முதலாவது கருத்துள்ளவராக இருந்தார். இப்பொழுது, ஒரு மறுபடியும் பிறந்த விசுவாசி எவற்றைத் "தரித்துக்கொள்ள வேண்டும்" என்பதைக் குறித்து அவருடைய சிந்தனை திருப்பப்படுகிறது:

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் கொலோசெயர் 3:1-17

1. உருக்கம் - மற்றவர்கள் மீது இரக்கமாயிருப்பது.

2. தயவு - சன்மார்க்க நடத்தையின் உன்னதமான அன்புடன் மற்றவர்களுக்கு நற்கிரியைகளைச் செய்வது (சங்கீதம் 34:8; லூக்கா 6:35; ரோமர் 11:22).

3. தாழ்மை - பெருந்தன்மையுடன் கூடிய அடக்கத்துடன் இருத்தல் மற்றும் உள்ளத்தில் எளிய மனப்பான்மையுடன் இருத்தல் (தன்னைக் குறித்து கருதுவதில்)

4. சாந்தம் - சாதுவான, பணிவான நடத்தை

5. பொறுமை - நீண்ட நாட்களுக்குச் சகித்துக்கொள்ளும் மனப்பான்மை (1கொரிந்தியர் 13:4; எபேசியர் 4:2; 1 தெசலோனிக்கேயர் 5:14). ஒரு விசுவாசி இந்த நற்பண்புகளைத் தரித்துக்கொள்ளும்போது, அவன் கிறிஸ்துவையும் தரித்துக்கொள்ளுகிறான்! (ரோமர் 13:14).

ஆ. "தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியரும்" என்று அவர்கள் அழைக்கப்படுவது, ஆதி இஸ்ரவேலை நினைவு கூறுவதாக இருக்கிறது. உபாகமம் 4:37; 7:6; 10:5; லேவியராகமம் 11:44). கிறிஸ்தவ சமுதாயத்தையும்,பேதுருஇந்தக்கருத்துடன்சேர்த்துக் கொள்ளுகிறார் (1 பேதுரு 2:9; எபேசியர் 1:4).

இ. வசனம் 13 "ஒருவரையொருவர் தாங்கி... மன்னியுங்கள்" கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் புதிய வாழ்க்கைக்குள், கீழ்க்கண்டவைகளும் சேர்க்கப்படுகிறது.

1. ஒருவரையொருவர் தாங்கி - "தாங்கி" என்றால், மற்றவர்களிடம் காணும் தவறுகள் மற்றும் நாம் வெறுக்கும், விரும்பத்தகாத குணப்பண்புகள் ஆகியவற்றோடு, அவர்களுடன் சமாதானமாக இருத்தல் அல்லது அதை சகித்துக்கொண்டு அவர்களோடு வாழுதல், என்று பொருள்படும்.

2. ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் ஒருவருக்கொருவர் மன்னித்தல் "குறைபாடுகளை மன்னித்தல்" என்றால் ஒரு மனிதனிடம், நாம் குற்றம்சாட்டக் கூடிய அல்லது தவறுகளை எத்தனை முறைகள் மன்னிக்க வேண்டிய அவசியமிருக்கிறதோ அத்தனை தடைவைகளும் அதாவது சட்டப்படி அவர்களை புகார் செய்வதிலிருந்தும் மன்னித்தல் (மத்தேயு 18:22). கர்த்தர் கிருபையாக நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் நமக்கு மன்னித்து, நாம் பின்பற்றுவதற்கு மிக மேலான மாதிரியாக இருக்கிறார் (எபேசியர் 4:32)

ஈ. வசனம் 14 "இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்றால், இந்த எல்லா நற்குணங்களையும் சேர்த்து, இவை எல்லாவற்றிற்கு மேல் கிரீடம் போல் அலங்காரமான நற்குணமாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் என்று பொருள்படும். இது,

1. இது நற்பண்புகளிலெல்லாம் மிக மேலானது (1 கொரிந்தியர் 13:13).

2. ஆவியின் கனிகளில் முதன்மையானது (கலாத்தியர் 5:22).

3. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் விளைவாக, நியாயமாகக் கிடைக்கும் கனி அன்பு (கலாத்தியர் 5:6).

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் கொலோசெயர் 3:1-17

4. எல்லா கற்பனைகளின் தொகுப்பின் மத்திய கருத்துப்பொருள் (கலாத்தியர் 5:14). போராட்டம் இருக்கும் இடத்தில் இது ஐக்கியத்தை உண்டாக்குகிறது. எங்கு இடித்துப்போடும் நிலையில் இருக்கிறதோ அங்கு கட்டப்பட இது உதவுகிறது; பிரிவினை ஏற்படவேண்டிய, இடங்களில் இது இணைக்கிறது.

4. தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள், சமாதானமும் கிறிஸ்துவினுடைய வசனங்களும், அவர்களுடைய இருதயங்களில் வாசம்செய்யவும், ஆளுகை செய்யவும் அனுமதிக்கிறார்கள் (3:15-17).

அ. வசனம் 15 "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்". "சமாதானம்" என்றால் சமாதானத்தோடு உங்களை இணைத்துக்கொள்வது, சமாதானத்துடன் சேர்ந்து செழித்து முன்னேறுவது, அமைதலாக இளைப்பாறி இருப்பது. நிலையாக ஒரு இடத்தில் இருப்பது என்று பொருள்படும். மனிதர்களுக்கிடையே இணக்கமான உறவு கொண்டிருப்பதே இதன் முதன்மையான கருத்து. "ஆளக்கடவது" என்றால் வாக்குவாதம் இருக்கும் இடத்தில் மத்தியஸ்தர் போல், இது கிரியை செய்கிறது என்று பொருள்படும். ஆகவே, விசுவாசிகள் மத்தியில், போராட்டாம், வாக்குவாதம் அல்லது வேறுபாடுகள் தோன்றும்போது, "கிறிஸ்துவின் சமாதானம்" நீதிபதியாக (மத்தியஸ்தர்) கிரியை செய்கிறது/

ஆ. வசனம் 15. "நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" "நன்றியுள்ளவர்கள்" என்றால் அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும். கிறிஸ்து, இவ்வாறாக கிருபையாக, தாராளமாக அவர்கள் மீது சமாதானத்தைப் பொளிந்தருளினதற்காக விசுவாசிகள் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். விசுவாசிகள் மத்தியில் நன்றியுள்ள துதி செலுத்தும் மனப்பான்மை மேலோங்கி இருக்கும்போது, சமாதானம் ஆளுகை செய்வது கடினமாக இராது. போராட்டங்கள், வாக்குவாதங்கள் மற்றும் வேறுபாடுகள் எழும்பினால் அது அவர்களை ஒன்றாக இணைக்கும் (எபேசியர் 4:3, 1 கொரிந்தியர் 7:15).

இ. வசனம் 16 "கிறிஸ்துவின் வசனம், உங்களுக்குள்ளே... பரிபூரணமாக வாசமாயிருப்பதாக..." "கிறிஸ்துவின் வசனம்" என்பது, இயேசுவின் போதனைகளைக் குறித்தும் (ஆதி அப்போஸ்தலர்கள் மூலமாக நமக்கு கொண்டுவரப்பட்டது, இப்பொழுது புதிய ஏற்பாட்டு வேதவசனங்கள்) "உங்களுக்குள்ளே" என்பது, விசுவாசிகளின் முழு சரீரத்தையும் ஒருவேளை குறிப்பிடப்படலாம். கிறிஸ்துவின் போதனைகள் விசுவாசிகளின் கூட்டத்தில் "வாசம்" செய்யவேண்டும் (வாழுவது, உள்ளே குடியிருப்பது, வாழும் இடமாக எடுத்துக்கொள்வது)

ஈ. வசனம் 16 "... சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும்... போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு..." என்றால், சமயத்திற்கேற்ற சாதுரியத்தோடும் ஞானத்தோடும் (ஆவிக்குரிய) போதித்து புத்தி சொல்ல வேண்டும் (எச்சரிப்பது அல்லது தவறைத் திருத்துவது) கிறிஸ்துவின் போதனைகள் இம்முறையில் கொடுக்கப்படாவிட்டால், நல்ல பலன்கள் கிடைப்பதற்குப் பதிலாக எதிரிடையான விளைவுகளையே உண்டாக்கும். விசுவாசிகள் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்படவும், திருத்தப்படவும் அவசியம். ஆனால் நியாயந்தீர்க்கப்பட்டு தண்டிக்கப்படுவது அல்லது கடின மொழிகளை பேசுவதும், அவர்கள் போதிக்கப்படும்போதும், புத்தி சொல்லப்படும்போதும், செய்யக்கூடாது.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்
கொலோசெயர் 3:1-17

உ. "பாட்டுகளினால்" என்பது, இங்கே அது இரண்டு நன்மைகளைக் கொடுப்பதைக் காணலாம். (1) ஒருவருக்கொருவர் நன்மைகளையும், விசுவாசிகளுக்கு ஆறுதலும் ஒரு பொதுவான ஆராதனையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. (2) தேவனுக்கு துதி ஏறெடுக்கப்படுகிறது. இந்த இரண்டு கருத்துக்களுக்கு அடிப்படையான நோக்கங்களும் கீழ்க்கண்டவற்றால் நிறைவேற்றப்படுகிறது.

1. சங்கீதங்கள் - பழைய ஏற்பாட்டிலுள்ள சங்கீதங்கள் பாடப்படுவதை இது குறிக்கலாம் (1 கொரிந்தியர் 14:15; யாக்கோபு 5:13).

2. கீர்த்தனைகள் - விசேஷ கிறிஸ்தவ பண்டிகை கொண்டாட்டங்கள் சம்பந்தப்பட்ட பாடல்களும்கீர்த்தனைகளும்;இவற்றில்அநேகமான வைகள்புதியஏற்பாட்டு வேதவசனங்களில் காத்து வைக்கப்பட்டுள்ளது (லூக்கா 1:46-55, 68-79, 2:29-32; கொலோசெயர் 1:15-20; பிலிப்பியர் 2:6-11; 1தீமோத்தேயு 3:19; எபேசியர் 5:14; இந்த வசனங்களுடன் வெளிப்படுத்தின விசேஷம் 4:8,11,5:9-10, 12-13).

3. ஆவிக்குரிய பாடல்கள் - பிதா மற்றும் கிறிஸ்துவுக்கு துதி ஏறெடுக்கவும், ஆராதிக்கவும் இயற்றப்பட்ட ஆவிக்குரிய மற்ற கீதங்கள்.

ஊ. வசனம் 16,17 "உங்கள் இருதயத்திலே, கர்த்தரைப் பக்திபுடன் பாடி... தேவனை ஸ்தோத்தரியுங்கள்". "இருதயத்திலே கர்த்தரை பக்திபுடன்" என்றால் கிறிஸ்துவின் மூலமாக, இருதயத்திலிருந்து (முழு உள்ளான மனிதன்) பக்தியோடு தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும் என்று பொருள்படும். எபேசியர் 5:20; ரோமர் 1:8, 7:25, 16:27).

வசனம் 17 "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும்", என்பது, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் செய்யும் கிரியைகளைக் குறிக்கும். நாம், எல்லாக் காரியங்களையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே செய்யவேண்டும். வாழ்நாள் முழுவதும், நாம் செய்கிற ஒவ்வொன்றிலும் கிறிஸ்துவின் அதிகாரத்தை உணர்ந்தவர்களாயும், முழுவதும் அவர்பேரில் வைக்கும் நம்பிக்கையிலும், செய்யவேண்டும். ஆகவே, நாம் சொல்லுகிற மற்றும் செய்கிறவைகளெல்லாம் கிறிஸ்துவின் மகிமையையும் நற்பெயரையும் சார்ந்துள்ளதாயிருக்கும் (பாதிப்பதாயிருக்கும்). (1 கொரிந்தியர் 10:31; 1பேதுரு 4:11).

முடிவுரை

அ. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்:

1. அவர்களுடைய இருதயங்களும், மனதும் மேலானவைகள் மீது வைக்கப்பட்டிருக்கும்.

2. அவர்களுடைய உலக (பாவ) சுபாவத்திற்கடுத்த காரியங்கள் என்னவாக இருந்தாலும் அவற்றையெல்லாம் அழித்துப்போடுவார்கள்.

3. கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்ளுவார்கள்.

4. அவர்களுக்குள் கிறிஸ்துவின் சமாதானமும் போதனைகளும் பூரணமாய் வாசம் செய்ய அனுமதிப்பார்கள்.

ஆ. இதன்பின் விளைவாக, ஆராதனைக் கூட்டங்களில் சண்டைகள், பிரிவினைகள் மற்றும் கோபங்கள் ஆகியவைகள் மட்டுப்படுத்தப்பட்டு, சமாதானம் ஆளுகை செய்வது சாத்தியமாகிக், காக்கப்படும். அத்துடன் சபையின் முப்பணிகளின் மீது, அவர்களுடைய கவனம் குவிக்கப்பட, அது அனுமதிக்கும்:

BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை

THE NEW TESTAMENT COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

கொலோசெயர்

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்
கொலோசெயர் 3:1-17

1. சீடத்துவக்கட்டுப்பாட்டிலும், ஆவிக்குரிய வாழ்க்கையில், சபை அங்கத்தினர்கள் முன்னேற உதவும்.

2. தேவன் மற்றும் கிறிஸ்துவை ஆராதிக்கவும் துதிக்கவும் உதவும்.

3. அவர்களுடைய சமுதாயம், தேசம் மற்றும் உலகத்திற்கு சுவிசேஷம் பரவச் செய்யப் பயன்படும்.

கிறிஸ்தவ குடும்பத்தினர்கள், அடிமைகள் மற்றும் எஜமான்கள் ஆகிய இவர்களுக்கிடையேயுள்ள தொடர்பு கொலோசெயர் 3:18-4:1

முன்னுரை

அ. எபேசியர் 5:22-6:9 வசனங்களிலும், குடும்பத்தினர்கள், அடிமைகள், எஜமான்கள் ஆகிய இவர்களுக்கிடையே உள்ள தொடர்புகள் சம்பந்தப்பட்ட, இதேவிதமான உபதேசங்கள் காணப்படுகிறது. அந்த போதனைகளில், குடும்பத்தினர்கள், எஜமான்கள் மற்றும் அடிமைகளுக்கு மத்தியில், ஒருவருக்கொருவர் இடையே பொறுப்புகள் இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம். இதே காரியம் கொலோசெயர் நிருபத்திலும், இங்கு காணப்படுகிறது.

1. குடும்பத்தினர்களுக்கிடையே உறவு (3:18-21)

அ. வசனம் 18 "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்". கிறிஸ்தவ மனைவிகள் மற்றும் புருஷர்களை இந்தக் கருத்து இங்கே குறிக்கிறது என்று நினைக்கப்படுகிறது. "கீழ்ப்படியுங்கள்" என்றால் உங்களைக் கீழ்ப்படுத்திக் கொள்ளுங்கள்; சொற்படி செய்யுங்கள்; உங்கள் கணவன்மார்களுக்குக் கீழ்ப்பட்டு தாழ்ந்து நடவுங்கள்; என்று பொருள்படும். குடும்பத்தில் இந்த உயர் பதவிவரிசையை சிருஷ்டிப்பின் ஒழுங்கு வரிசையை அடிப்படையாகக் கொண்டு கூறுகிறார் (1 கொரிந்தியர் 11:3; ஆதியாகமம் 2:7,18,21-23).

ஆ. "கர்த்தருக்கேற்கும்படி", என்றால் கர்த்தருக்குள் இருப்பவர்கள், இவ்வாறு செய்வது நேர்மையானதும், சரியானதுமான காரியமாயிருக்கிறது. ஆகிலும், மனைவி தன்னைக் கீழ்ப்படுத்துவது, தன் ஆர்வம் மற்றும் கீழ்க்கண்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.

1. ஒரு குடும்பத்திற்கு ஒரு தலைவர் இருக்கவேண்டும். இரண்டு தலைவர்கள் இருக்க முடியாது.

2. அவளுடைய கணவன், அவளை நேசித்து, மரியாதையுடன் நடத்துகிறான்.

3. அவளுடைய கீழ்ப்படிதல், தேவனுடைய வார்த்தை மற்றும் கிறிஸ்துவின் போதனைகளில், கற்றுக் கொடுக்கப்பட்ட காரியங்களுக்குள் அடங்கினதாக இருக்கிறது. (அப்போஸ்தலர் 5:7-10)

இ. வசனம் 19. "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்." "அன்பு கூருங்கள்" என்றால், சாதாரண பாலின கவர்ச்சி அல்லது பாச உணர்ச்சிகளில் எழுந்தது அல்ல. அது, மனைவியின் பூரண நல்வாழ்வுக்காக, முடிவில்லாமல் கிரியையில் அக்கறையுடனும், கருத்துடனும் இருப்பதை இங்கு குறிப்பிடுகிறது. "கசந்து கொள்ளாதிருங்கள்" என்றால் அவள் மீது கோபம் மற்றும் எரிச்சல் அடையக் கூடாது. அவள் உங்களிடம் கசந்து கொள்ளுமளவிற்கு அவளை நடத்தக் கூடாது. எனவே குடும்பத்தில் நல்ல வளமான, அன்புள்ள உறவு நிலைத்திருக்க வேண்டுமானால், ஒவ்வொரு திருமண துணைவி/துணைவர், அடுத்தவர்களிடம் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

. வசனம் 20. "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்

கிறிஸ்தவ குடும்பத்தினர்கள், அடிமைகள் மற்றும் எஜமான்கள் ஆகிய இவர்களுக்கிடையேயுள்ள தொடர்பு
கொலோசெயர் 3:18-4:1

இது கர்த்தருக்குப் பிரியமானது." "கீழ்ப்படியுங்கள்" என்றால் எபேசியர் 6:1 வசனத்தில் உள்ள வண்ணமாகவே பொருள்படும், நீங்கள் கீழ்ப்பட்டவர்கள் என்று அறிந்து, உங்களிடம் உங்கள் பெற்றோர் சொல்கிறவைகளுக்கு கவனமாகச் செவிகொடுங்கள்! (நீதிமொழிகள் 4:1; 31:38; யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16).

உ. "எல்லாக் காரியத்திலேயும்" பெற்றோர் இருவரும், அவர்கள் செய்கிற மற்றும் பேசுகிற எல்லாவற்றிலும் கர்த்தரைப் பிரியப்படுத்தி வாழுகிற ஒரு கிறிஸ்தவ குடும்பத்தைக் குறித்து, இங்கு கூறப்படுள்ளது என்ற நினைக்கப்படுகிறது. கணவனும் மனைவியுமாக, தேவனுடைய வார்த்தைக்கும், கிறிஸ்துவினுடைய போதனைகளுக்கும் எதிராக, அநீதியான செயல்களைச் செய்வதில் ஈடுபடுவார்களேயானால், பிள்ளைகள், அவர்களுடைய பெற்றோருக்கு நிச்சயமாகக் கீழ்ப்படிய மாட்டார்கள்! இது கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும் அதாவது, அவரை மகிழ்ச்சியடையச் செய்வதற்குக் காரணமாயிருக்கும் என்று பவுல் கூறுகிறார்.

ஊ. வசனம் 21. "பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்." "கோபமூட்டாதிருங்கள்" என்றால், உணர்ச்சியைத் தூண்டுவது, கலங்கவைப்பது, சினமடையும்படி எழுப்பிவிடுவது அல்லது தூண்டிவிடுவது, என்று பொருள்படும்.

"திடனற்றுப் போகாதபடி" என்றால் ஆவியில் சோர்வடைவது, மனம் இளக்கரித்துப் போவது அல்லது திகைப்படைந்து அச்சமடையச் செய்வது, தைரியத்தை இழக்கச் செய்வது, என்று பொருள்படும். இந்த அறிவுறுத்தல் குடும்பத் தலைவரான தகப்பனாரை நோக்கிக் கூறப்படுகிறது. ஆகிலும், இதே காரியம் மனைவிக்கும் பொருந்தும். எபேசியர் 6:4 வசனத்தில், பெற்றோர் அவர்களுடைய பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற (வேதத்திலுள்ள வசனங்கள்) அவருடைய கற்பனைகள் மற்றும் முன்மாதிரியின் படியும், (அவர்களுடைய வாழ்க்கையின்) சிட்சித்து, போதித்து வளர்க்க வேண்டும் என்றும் கூடுதலாகக் கூறப்பட்டுள்ளது.

எ. குடும்பத்தில், பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்கிடைய வளமான அன்புள்ள நல்உறவு நிலைத்திருக்க வேண்டுமானால், மனைவிக்கும் கணவனுக்கும் இடைபே ஒருவருக்கொருவர் பொறுப்புடன் தங்கள் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியது போலவே பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடைபே இத்தேவை சந்திக்கப்பட வேண்டும். குடும்பத்தில் கணவன், மற்றும் மனைவிக்கும் இடையேயும், பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையேயும் உள்ள உறவு, குடும்பத்திற்கு வெளியே, புதியவர்களுடன், அவர்கள் கொண்டுள்ள தொடர்புகளில், நன்மையான அல்லது தீங்கிழைக்கும் விளைவுகளையும் உண்டாக்க சாத்தியமுண்டு! (குடும்பத்திற்குள் இனிய உறவு இருக்குமாயின் வெளியே நல்லுறவு ஏற்பட சாத்தியமுண்டு)

2.வேலைக்காரர்களுக்கும் எஜமான்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு. (3:22-4:1)

அ. வசனம் 22. "வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து ---" இங்கே கூறப்பட்டுள்ள வேலைக்காரர் மற்றும் எஜமான்கள் ஒரே குடும்பத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கிறிஸ்தவ குடும்பத்தினர்கள், அடிமைகள் மற்றும் எஜமான்கள் ஆகிய இவர்களுக்கிடையேயுள்ள தொடர்பு கொலோசெயர் 3:18-4:1

ரோம இராஜ்யத்திலுள்ள முக்கிய பட்டணங்களில், ஜனத்தொகையில் பாதிப்பேர்கள் அடிமைகளாக வேலை செய்தார்கள். இவர்கள், தாங்கள் வேலை செய்த குடும்பத்தின் ஒரு பாகமாகக் கருதப்பட்டார்கள். இக்காரணத்தினால், அவர்கள் கீழ்ப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பதை அறிந்து, அவர்களுடைய எஜமான்கள், செய்யும்படி அவர்களிடம் கூறுகிற யாவற்றையும், கேள்வி கேட்காமல் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டார்கள். இன்று அநேக சமுதாயங்களில், அடிமைகள் முற்றிலும் ரத்து செய்யப்பட்டுவிட்டபடியால், இந்த அறிவுரைகள், கிறிஸ்தவ வேலைக்காரர்களையும், எஜமான்களையும் நோக்கி கூறப்பட்டதாக எடுத்துக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்!

ஆ. வசனம் 22-24. "---- நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்." கிறிஸ்தவ வேலையாட்கள் அவர்களுடைய கிறிஸ்தவ எஜமான்களுக்கு (அல்லது அவிசுவாசிகளுக்கு) எல்லா காரியங்களிலேயும், அவர்கள் வேலை செய்வதை கண்காணித்தாலும் அல்லது மேற்பார்வையிடாமல் விட்டுவிட்டாலும், கீழ்ப்படிய வேண்டும். அவர்கள் மனுஷர்களுக்கு வேலைசெய்வதுபோல் செய்வதற்குப் பதிலாகக் கர்த்தருக்கே கீழ்ப்படிந்து வேலை செய்வதுபோல் செய்ய வேண்டும்.

"கபடமில்லாத இருதயத்தோடே" என்றால், ஒரே மனதோடு, சுயநலமான நோக்கங்கள் இல்லாமல், என்று பொருள்படும். "தேவனுக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாக" என்றால், கர்த்தரைப் பிரியப்படுத்தும்படியாக வேலை செய்வது என்று பொருள்படும். (எபேசியர்6:5) இது, உன் இருதயத்தில் அவரிடமுள்ள மரியாதையையும் பக்தியையும் வெளிப்படுத்துகிறது. இது சுயவேலை செய்யும் வேலையாட்களுக்கும் பொருந்தும்!.

இ. வசனம் 23. "சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து ----" கிறிஸ்தவ வேலையாட்கள், அவர்களுடைய எஜமான்களுக்குக் கீழ்ப்படிவதற்கும், அவர்களுக்கு வேலை செய்வதைக் கர்த்தரைப் பிரியப்படுத்த செய்வது போல் செய்வதற்கும் நல்ல காரணம் இருக்கிறது. அவர்கள் ஏற்றவாறு சரியானபடி வெகுமதியளிக்கப்படுவார்கள். அவர்கள் நியாயமாய் பெற்றுக் கொள்ள வேண்டியவைகளை நிறைவாய் பெற்றுக் கொள்ளுவார்கள் என்று, இது பொருள்படும்! (எபேசியர் 6:8)

ஈ. புதிய ஒழுங்கு முறைகள் செயல்படுத்தப்படப்போகும் காலமாகிய, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, விசுவாசிகள் எல்லோருக்கும் கொடுக்கும்படியாகப் பாதுகாக்கப்பட்ட இந்த பலன், சுதந்திரமாகப் பெற்றுக் கொள்வதில் (நிலைமை மற்றும் உடைமைகள்) ஒரு பாகமாக இருக்கிறது. (1:12; அப்போஸ்தலர்20:32; எபேசியர் 1:14; 5:5; எபிரெயர் 9:15; 1பேதுரு 1:4-5):

1. உயிர்ப்பிக்கப்பட்ட மகிமையான சரீரம்.

2. கிறிஸ்துவோடு, பூமியில் 1000 வருட அரசாட்சி.

3. புதிய பூமியிலுள்ள, புதிய எருசலேமில் நிரந்தர இடம்.

கிறிஸ்தவ குடும்பத்தினர்கள், அடிமைகள் மற்றும் எஜமான்கள் ஆகிய இவர்களுக்கிடையேயுள்ள தொடர்பு
கொலோசெயர் 3:18-4:1

4. கிறிஸ்து மற்றும் பிதாவின் சமுகத்தில் நித்தியமாக இருத்தல்.

5. மற்றும் அங்குள்ள நிலைமை அதிசயமாக இருக்கும்: இனிமேல் கண்ணீர் இல்லை, மரணமுமில்லை துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. (1தெசலோனிக்கேயர் 4:13-17; வெளிப்படுத்தின விசேஷம்20:4; 21:1-5)

உ. வசனம் 25. "அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான். "பட்சபாதமே இல்லை." இங்கு எதிர்மறையில் உள்ளது. அவர்களுடைய எஜமான்களுக்குக் கீழ்ப்படியாமல், கர்த்தரைச் சேவிப்பதுபோல் அவர்களுக்கு வேலைசெய்யாமல் இருக்கும் வேலைக்காரர்களுக்கு, அவர்களுடைய தவறான (அநீதியான, மனதைப் புண்படுத்தும், காயப்படுத்தும் கோபப்படுத்தும்) நடத்தைக்காக பதிலளிக்கப்படும்! "பலனை அடைவான்" என்றால் திரும்பப் பெற்றுக்கொள்ளுவான், பதில் கொடுக்கப்படும் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் இப்படிப்பட்ட நடத்தைக்கு ஏற்ற நியாயமான சரியானபலன்கொடுக்கப்படும்2கொரிந்தியர்5:10ரோமர்14:10-12;1கொரிந்தியர்3:11-15)

ஊ. தேவன் தனி சலுகை காட்டமாட்டார்! மற்றொருவருக்குக் கீழ் பதவியில் இருப்பவர்கள், தாங்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதினால், தங்களுடைய எஜமான்களை தவறான முறையில் நடத்த சுதந்திரம் உண்டு என்று தப்பெண்ணம் கொள்வது வருந்தத்தக்கது!

அவர்களுடைய தவறான கிரியைகள் தண்டிக்கப்படாமல் விடப்படமாட்டாது!

எ. வசனம் 4:1 "எஜமான்களே --- வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்." "எஜமான்களே" என்பது இக்காலத்திலுள்ள கிறிஸ்தவ எஜமான்களைக் குறிக்கும். "நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்"என்றால்,கொடுக்கவேண்டியவைகளைக் கொடுங்கள், அன்புடன் தருவது, தேவையானவற்றைத்தருவது,உண்மையானவற்றையும்,நீதியாயிருப்பவைகளையும்,நேர்மையானவைகளையும் தந்து தேவையை பூர்த்தி செய்வது என்று பொருள்படும்.

ஏ. வசனம் 4:1 "உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து ---" "பரலோகத்தில் எஜமான், விசுவாசிகளின் நியாயாசனத்தில் வீற்றிருக்கும் இயேசு கிறிஸ்து வேலைக்காரர்கள் தங்களுடைய எஜமான்களிடம் நடந்துகொள்ளும் நடத்தைக்குத் தக்கபடி எவ்வாறு நியாந்தீர்க்கிறாரோ, அவ்வாறாகவே,எஜமான்களையும்,அவர்களுடையவேலைக்காரர்களை நடத்துவதற்கு தக்கதாக நியாயந்தீர்ப்பார். (எபேசியர்6:9) அதற்கேற்றவாறு அவர் பலனளிக்கவும் அல்லது தண்டிக்கவும் செய்வார்!

முடிவுரை

அ. ஆகவே, ஒரு வீட்டிற்குள் தங்கியிருப்பவர்களெல்லாருடையமத்தியில்ஒருவருக்கொருவர்நிறைவேற்றவேண்டியகடமைகள் இருக்கிறது:

1. மனைவிகள் கர்த்தருக்கேற்கும்படி, அவர்களுடைய கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருஷர்களும் அவ்வாறே, அவர்களுடைய மனைவிகளில் அன்பு கூர்ந்து, அவர்களைக் கடினமாக நடத்தாதிருக்கக் கவனமாக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ குடும்பத்தினர்கள், அடிமைகள் மற்றும் எஜமான்கள் ஆகிய இவர்களுக்கிடையேயுள்ள தொடர்பு
கொலோசெயர் 3:18-4:1

2. பிள்ளைகள், அவர்களுடைய கிறிஸ்தவப் பெற்றோருக்கு எல்லாக்காரியங்களிலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அவ்வாறே பெற்றோரும், அவர்களுடைய பிள்ளைகளை, கோபப்படும்படியாக அல்லது திடனற்றுப் போகும்படியாக சிட்சிக்கவும், பயிற்றுவிக்கவும் கூடாது.

3. அவர்கள் கண்காணிக்கப்பட்டாலும், கண்காணிக்கப்படாவிட்டாலும், கிறிஸ்தவ வேலைக்காரர்கள் அவர்களுடைய எஜமான்களுக்கு, எல்லாக்காரியங்களிலேயும் கீழ்ப்படிய வேண்டும். அவ்வாறே கிறிஸ்தவ எஜமான்களும், தாங்கள் அறிந்த நன்மையானவைகள், நீதியானவைகள், மற்றும் நேர்மையானவைகளை, அவர்களுடைய வேலைக்காரர்களுக்குப் போதுமான அளவு கொடுக்க வேண்டும்.

ஆ. ஒரு வீட்டிலுள்ள அங்கத்தினர்கள் யாவரும் அவரவருடைய கடமைகளை நிறைவேற்றினால் அவர்கள் இணக்கமாக இசைந்து வாழ்ந்து, கர்த்தருக்கு அதிக காரியங்களை செய்து முடிக்க முடியும். அத்துடன் நித்திய சுதந்தரத்தைப் பெறவும், கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் “நல்லது உத்தம ஊழியக்காரனே” என்ற சொல்வதைக் கேட்கவும் கூடும்.

வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் கிறிஸ்தவ நடத்தை கொலோசேயர் 4:2-6

முன்னுரை

அ. 3:18-4:1 வசனங்களில், ஒரு கிறிஸ்தவ வீட்டிலுள்ள அங்கத்தினர்களுக்கு இடையேயுள்ள உறவு தொடர்பாக பவுல் உபதேசித்தார். இன்றைய வேதபாகத்தில், பொதுவாக ஒரு சபையிலுள்ள அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட குறிப்புகளைக் குறித்து பவுல் விவரிக்கிறார்.

1. ஜெபம்

2. வெளியேயுள்ளவர்கள் மத்தியில் வாழ்க்கை

3. வெளியே உள்ளவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொடுத்தல்

1. கிறிஸ்தவர்கள், ஜெபத்திற்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும். 4:2-4.

அ. வசனம் 2. "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்." "இடைவிடாமல்" என்றால், ஜெபத்தில் உண்மையாயிருத்தல், விடாமுயற்சியுடன் இருப்பது ஜெபத்தை இடைவிடாமல், ஜாக்கிரதையுடன் விடாமுயற்சியுடன் ஏறெடுத்தல். கிறிஸ்து, அவருடைய சீடர்களிடம் கூறிய வார்த்தைகளுக்கு இது மிகவும் ஒத்ததாக இருக்கிறது: "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்." (லூக்கா18:1; அப்போஸ்தலர்1:14; 2:42; ரோமர்12:12)

ஆ. வசனம் 2. "---- ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்," "விழித்திருங்கள்" என்றால், தூக்கத்திலிருந்து எழுந்தவர்களாகக் காத்துக் கொள்ள வேண்டும், ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நின்று காவல் செய்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று பொருள்படும் "ஸ்தோத்திரத்துடன்" என்றால் நன்றியறிதலுடன் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும், என்று பொருள்படும். நம் மத்தியில், ஜெபத்தை விடாமுயற்சியுடன் இடைவிடாமல் ஏறெடுப்பவர்கள் எவர்களோ அவர்கள்தான் விழித்திருந்து, ஜாக்கிரதையுடன் காத்துக் கொள்ளுவார்கள். (சத்துருவுக்கு எதிராக) கிறிஸ்து அவர்களுக்குச் செய்த காரியங்களுக்காக, அநேக வழிகளில் நன்றியறிதலை எப்போதும் வெளிப்படுத்துவார்கள்!

இ. வசனம் 4. "திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்." தீமோத்தேயுவையும், தன்னையும் (வெளிநாட்டு சுவிசேஷ ஊழிய குழுவிலுள்ள மற்றவர்களையும்) கொலோசே பட்டணத்திலுள்ள விசுவாசிகள், அவர்களுடைய ஜெபங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று, பவுல் கேட்டுக்கொள்ளுகிறார். (1:1; எபேசியர்6:18-19) "திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி," என்றால், தீமோத்தேயுவுக்கும், அவருக்கும், சுவிசேஷ செய்தியை அறிவிக்க தருணங்கள் கிடைக்க தேவன் கிருபை செய்ய வேண்டும் என்று ஜெபிக்கும்படி கொலோசேயிலுள்ள விசுவாசிகளை, பவுல் கேட்டுக் கொண்டார். (1கொரிந்தியர்16:9; 2கொரிந்தியர்2:12; அப்போஸ்தலர்14:27)

வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் கிறிஸ்தவ நடத்தை கொலோசெயர் 4:2-6

ஈ. வசனம் 3. "கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான், அந்த இரகசியத்தைக் குறித்துப் --- பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு." "வெளிப்படுத்துவதற்கு," என்றால், பிரசங்கம் செய்ய, உரையாற்ற, சொற்பொழிவு செய்ய என்று இங்கு பொருள்படும். "இரகசியத்தினிமித்தம்" என்றால் மறைக்கப்பட்ட ஒன்று, என்று பொருள்படும். கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கும் இரட்சிப்பின் சுவிசேஷசெய்தியை இங்கு குறிக்கும் (1:26; 2:2; எபேசியர்1:9-10) "அதினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான்," என்றால் இந்த நிருபத்தை எழுதும் போது, பவுல், சீசருக்குமுன் நின்று நியாயந்தீர்க்கப்பட, ரோமாபுரியில் "வீட்டுக்காவலில்" இருந்தார். (அப்போஸ்தலர்28:16,30-31; எபேசியர் 3:1; அப்போஸ்தலர்25:11)

உ. வசனம் 4. "---- பேசவேண்டிய பிரகாரமாகப் பேசி ---- எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்." சுவிசேஷ செய்தியை பிரசங்கம் செய்ய, சொற்பொழிவாற்றவும், "பேசவேண்டிய பிரகாரமாக" என்றால் அதை தெளிவாக விளக்கிக் கூற, அதை விளங்கி திட்டவட்டமாகப் பார்க்கும்படியாக, என்று பொருள்படும். (எபேசியர்6:19-20). விசுவாசிகள் யாவரும்,

1. சுவிசேஷ செய்தியைத் தெளிவாகவும், சுருக்கமாகவும், அவர்களுடைய இருதயங்களிலும், மனதிலும், எல்லா நேரத்திலும் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்.

2. சுவிசேஷ செய்தியை அவர்கள் கொடுக்க சுவிசேஷம் "செல்லும்படியான வாசலைத் தேவன் திறக்கும்படியாக" ஜெபிக்க வேண்டும்.

3.தேவன், அவர்களுக்குக் "கதவைத்திறக்கும் போது" தைரியமாக (பயமின்றி) சுவிசேஷ செய்தியை சொல்ல!

2.வெளியே உள்ளவர்களிடம் கிறிஸ்தவர்கள் ஞானமாக நடந்து கொள்ள வேண்டும். (4:5)

அ. "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து ---" "ஞானமாய்," என்றால் ஆவிக்குரிய ஞானத்துடன் என்று பொருள்படும். "புறம்பேயிருக்கிறவர்கள்" என்றால் சபைக்குப் புறம்பாக, கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் அவிசுவாசிகள். சபைக்கும், விசுவாசிகளுக்கும், சுவிசேஷத்தை பரப்பவேண்டிய இலக்காக இவர்கள் இருக்கிறார்கள்!

ஆ. நம்முடைய அநுதின நடத்தையும், வெளியிலுள்ளவர்களுக்கு சுவிசேஷ செய்தியை நாம் கொடுக்கும் முறையும், சபைக்கு அவர்கள் வருகை தருவதிலிருந்து, அவர்கள் நம்முடைய செய்தியைக் கேட்டு ஊக்கப்படுத்தப்பட்டார்களா அல்லது மனதில் பயமுறுத்தப்பட்டார்களா என்பதைத் தீர்மானிக்கும், என்று பவுல் இங்கு கூற முயற்சிக்கிறார்! புறம்பேயிருப்பவர்கள் மத்தியில் நாம் வாழும்போதும், சாட்சி கூறும்போதும், விசேஷமாக இரட்சிக்கப்படாத கணவன்மார்களை உடையவர்கள், ஆவிக்குரிய விவேகத்தோடு நடந்து, விரோதத்தையும், பிரிக்கப்படுவதையும் தவிர்க்க வேண்டும்! (1பேதுரு 3:1-6)

இ. "காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்."

வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் கிறிஸ்தவ நடத்தை கொலோசெயர் 4:2-6

ஆகவே, "செல்லும்படியான வாசல்கள்" திறக்கப்படும்போது அதை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுவிசேஷ செய்தியை அவிசுவாசிளுக்கு தைரியமாக பயப்படாமல் அறிவிக்க கிடைக்கும் எந்தத் தருணத்தையும் பயன்படுத்தாமல் விட்டுவிடக்கூடாது. அவைகளை நாம் நழுவ விட்டுவிட்டால் திரும்ப அவை ஒருபோதும் கிடைக்காது. ஆகவே அந்த சிறப்பான தருணங்களை நாம் ஆதாயம் செய்து கொள்ள வேண்டும். நாம் அவற்றைப் பிரயோஜனப்படுத்தாவிட்டால் அவை நம்மை விட்டு சீக்கிரம் கடந்து சென்றுவிடும்!

3. கிறிஸ்தவர்களுடைய உரையாடல் கிருபை நிறைந்ததாகவும் உப்பால் சாரமேறியதாகவும் இருக்க வேண்டும். (4:6)

அ. "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயிருப்பதாக ----" "வசனம்" என்பது சிலகாரியங்களைக் குறித்து நீங்கள் பேசும் முறை, ஒரு குறிப்பிட்ட தலைப்பில், விசேஷமாக கிறிஸ்துவின் சுவிசேஷ செய்தியை, விவாதிக்கும் நடை முறை என்று இங்கு பொருள்படும். "எப்போதும் கிருபை பொருந்தினதாய் என்றால், அழகான கண்ணியமான நடையில் எப்போதும், கூறப்பட வேண்டும் என்று பொருள்படும்.

ஆ. "உப்பால் சாரமேறினதாக," "சாரமேறினதாக" என்றால், ஒழுங்கு முறைப்படி, ஆயத்தத்தோடு பொருத்தமானதாக செய்து, வாசனைப் பொருட்களை சேர்த்து சுவையூட்டி ஆர்வத்தைத் தூண்டும்படியாக ஆயத்தம் செய் என்று இங்கு பொருள்படும். பாதுகாக்கப்படவும், சுவையைக் கூட்டுகிற உப்பு இங்கு முதன்மையான சுவையூட்டும் பொருளாக இருக்கிறது

இ. குடும்பத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நம்முடைய உரையாடல் விசேஷமாக, சுவிசேஷ செய்தியைக் கொடுக்கும் போது, அழகான கண்ணியமான நடையில் இருப்பது மட்டும் அல்லாமல், சூழ்நிலையைச் சந்திப்பதற்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும், ஆயத்தமாகவும் இருக்க வேண்டும். அது சுவை நிறைந்த, ஆர்வத்தைத் தூண்டும் தன்மையுடையதாக இருக்க வேண்டும், இனிமையாகக் கவர்ச்சியுடன் இருக்க வேண்டும்.

ஈ. "நீங்கள் (என்னுடைய சீடர்கள்) பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்," என்று இயேசு கூறும்போது இந்தப் பொருள்படவே கூறுகிறார். (மத்தேயு 5:13; மாற்கு9:49-50; லூக்கா14:34-35) பேதுரு இவ்வாறு கூறுகிறார்: "---- உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேதுரு 3:15)

உ. "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு ---" நாம் யாருடன் பேசுகிறாமோ அவர்களுடைய, வாழ்க்கை, விருப்பங்கள், தேவைகள் ஆகிய இவைகளுக்கு ஏற்றாற்போல், நம்முடைய உரையாடல்களும், சுவிசேஷத்தை நாம் கொடுக்கும் முறைகளும் வடிவமைக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். (1கொரிந்தியர்9:22)

வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் கிறிஸ்தவ நடத்தை கொலோசெயர் 4:2-6

முடிவுரை

அ. நம்முடைய குடும்பங்களில், நாம் ஜெபத்தில் அதிக அக்கறையுடையவர்களாக விடாமுயற்சியுடனும் இருக்கவேண்டும். இவ்வாறு நாம் இருப்பது, ஆவியில் விழிப்புடனும், கிறிஸ்து நமக்குச் செய்தபாவற்றிற்காகவும் நன்றியுள்ளவர்களாகவும், இருக்க வழிநடத்தும்!

ஆ. ஆ. ஆகிலும் வெளியிலுள்ளவர்கள் மத்தியில் வாழும்போது, சுவிசேஷத்திற்கும், சபைக்கும் அவர்களைக் கவரும்படியான நடையில் பேசவேண்டும். தேவன் கொடுக்கும் தருணங்களில், கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கும் மீட்பின் சுவிசேஷ செய்தியை, தைரியமாகவும் பயப்படாமலும், விவேகத்துடனும், அவர்கள் அதை எதிர்த்து விலகிச் சென்றுவிடாமல் இருக்கும் முறையில் அறிவிக்க வேண்டும்.